பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (22.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 148

பொதுசன நூலகம் ... படிப்பகம் ... யாழ்ப்பாணம்.

# ஐ.நா. செயலருடன் வைகோ விரைவில் முக்கிய சந்திப்பு!

## ஈழத்தமிழர் அவலநிலை விளக்கப்படும்





புதுடில்லி,ஏப்ரல்22

தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவரும் ஈழத்தமிழர் ஆதரவாளருமான மறுமலர்ச்சித் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி விரைவில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ - மூனைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவிருக்கின்றார்.

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அரச ஒடுக்குமுறைகளால் தமிழ் மக்கள் படுகின்ற அவலங்கள் குறித்தும் உண்மை நிலையை இந்தச் சந்திப்பின் போது, வைகோ ஐ.நா.செயலர் பான் - கீ - மூனுக்கு விலாவாரியாக எடுத்துவிளக்குவார் என்று விடயமறிந்த வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தை சந்திப்பதற்கு வைகோவிற்கு ஐ.நா.சபை நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது என்றும் - இன்னும் சில தினங்களில் இந்தச் சந்திப்பு இடம்பெறவிருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

முன்னதாக கடந்த வாரம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்ட வைகோ ஈழத்தமிழர் பிரச்சினை குறித்தும் அங்கு விவாதித்திருந்தார். இதனையடுத்து நாடு திரும்பிய கையோடு அவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## துரையப்பா ஸ்ரேடியம் மீண்டும் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு எதிர்வரும் சனிக்கிழமை 26ஆம் திகதி தொடக்கம் பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு இடம்பெறும் வைபவத்தில் இந்த விளையாட்டரங்கு மாநகர சபையிடம் கையளிக்கப்படும். அதனையொட்டி கலை நிகழ்ச்சிகள், உதைபந்தாட்ட நிகழ்வு என்பன இடம் பெறும்.

துரையப்பா விளையாட்டரங்கு நீண்டகாலமாக படையினர் வசம் இருந்தது தெரிந்ததே. (அ-1-111-302)

## சந்திப்பைத் தடுப்பதில் அரசு திரைமறைவு முயற்சியில்!

கொழும்பு, ஏப். 22

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை. கோபாலசாமியின், ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகத்துடனான சந்திப்பைத் தடுப்பதற்கான முயற்சிகளை இலங்கை அரசு திரைமறைவில் மேற்கொண்டு வருவதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் வைகோ, ஐ.நா.செயலருக்குத் தெரிவிக்கும் தகவல்களும் கருத்தும் பிரச்சினைகளை மேலும் தீவிரமாக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## அதிக விலைக்கு அரிசி விற்பவர்களை மடக்கிப் பிடிக்கப் பொலிஸார் களத்தில்!

கொழும்பு,ஏப்.22

அரிசியை நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸார் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் உதவியுடன் இந்த சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அரிசியை அதிக விலைக்கு விற்பவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## நீதியின் முன் நிறுத்தப்படாத கலாசாரத்துக்கு முடிவு கட்டவேண்டும்

### அடிகளாரின் மறைவுக்கு ஆஸி.நிறுவனம் கண்டனம்

மெல்போர்ண்,ஏப்.22

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாத கலாசாரத்திற்கு முடிவு காண்பதற்கு இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளாரின் மறைவு குறித்து கரித்தாஸ் ஆஸ்திரேலிய நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் இடம்பெறும் கடும் மோதல்கள் மற்றும் சகல தரப்பினரதும் (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு தேவாலயச் சூழலில் நேற்று விமானக் குண்டுவீச்சு!

### ஒருவர் பலி; 8 பேர் காயம்

வவுனியா,ஏப்.22

முல்லைத்தீவு நகரில் உள்ள கத்தோலிக்க தேவாலயம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் 3.50 மணியளவில் விமானப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்; இரண்டு சிறுமிகள் உட்பட மேலும் 8 பேர் காயமடைந்தனர்.

நகரின் மத்தியில் இருந்த கத்தோலிக்க தேவாலயம் பின்னர் ஆழிப்பேரலை நினைவு (12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாரட்ணம் அடிகளாரின் இறுதிக்கிரியை இன்று கிளிநொச்சியில்

### யாழ்.மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி

யாழ்ப்பாணம்,ஏப்.22

வவுனிக்குளத்தில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ். மறைமாவட்ட குருவாகிய அருட்திரு. எம். எக்ஸ்.கருணாரட்ணத்தின் இறுதி நிகழ்வுகள் இன்று கிளிநொச்சியில் இடம்பெறும் என்று யாழ்.ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆயர் இல்லம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கருணாரட்ணம் அடிகளாரின் திருவுடல் இறைமக்களின் அஞ்சலிக்காக கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் வைக்கப் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மறை மாவட்டத்தினரும் கண்டனம்

யாழ்ப்பாணம் ,ஏப்22

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப்பணிப்பாளர் அருட்திரு கருணாரட்ணம் அடிகளாரின் படுகொலையை யாழ். மறை மாவட்டத்தினர் வன்மையாக கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆயர் இல்லம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க குருவும் கிளிநெச்சி - முல்லைத்தீவு மறைக் கோட்டத்தில் பணிபுரிந்தவருமான ம. கருணாரட்ணம் - கிளி அடிகளார் (20.04. 2008) ஞாயிறு திருப்பலியின் பின்னர் மல்லாவி - மாங்குளம் வீதியில் குழந்தை யேசு கோயிலுக்கு சமீபமாக கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டு யாழ். மறை மாவட்டம் முழுவதுமே அதிர்ச்சியிலும் சோகத்திலும் உறைந்து போயுள்ளது.

துன்பத்திலும் வேதனையுறுவோரின் தேவைகளில் பணிபுரிபவரும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் நடைபெறும் போது துணிந்து குரல் கொடுப்பவருமான இவரின் இறப்பு, யாழ். மறை மாவட்டத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

இவரின் இறப்பால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் யாழ். மறை (12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் தொண்டு செய்த அடிகளாரைக் கொன்று கோர முகத்தை மீண்டும் நிரூபித்துவிட்டது அரசு

### விடுதலைப் புலிகள் கண்டனம்

கிளிநொச்சி,ஏப்.22

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மனித உரிமை ஆர்வலர்களையும் இலக்குவைத்துத் தாக்குதலை நடத்தும் ஸ்ரீலங்கா அரசினது செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மனித உரிமை மீறல்களில் தொடர்ந்தும் ஈடுபட்டு வரும் ஸ்ரீலங்கா அரசினது இத்தகைய போக்கை அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும், அனைத்துலக நாடுகளும் வன்மையாகக் கண்டிப்பதோடு இதுபோன்ற மோசமான மனித உரிமை மீறல்களில் ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்தும் ஈடுபடாமல் இருப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் கோருகின்றோம்.

மக்களின்நலனுக்காகவும் மனித உரிமை நிலைமையை மேம்படுத்துவதற்காகவும் எப்போதும் உழைத்து வந்த ஒரு செயற்பாட்டாளரை ஸ்ரீலங்கா அரசு வேண்டுமென்றே இலக்கு வைத்திருக்கிறது. மக்கள் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, அர்ப்பணிப்போடு செயற்பட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்

# அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தோரில் 65 குடும்பங்கள் நேற்று மீளக்குடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நாவாந்துறை சென்.நீக்கலஸ் தேவாலயத்திலும் யாழ். அடைக்கல மாதா தேவாலயத்திலும் தஞ்சம் அடைந்திருந்தவர்களில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 277 பேர் நேற்றுத் தமது சொந்த இடமான அல்லைப்பிட்டியில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

யாழ்.அரச செயலக அதிகாரிகள், ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் பிரதிநிதிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் மக்களை அல்லைப்பிட்டிக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் மூன்று பஸ்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர்.



மக்கள் தமது சொந்த இடத்தைச் சென்றடைந்ததும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் சி.அ.உதயன், கடற்படை அதிகாரி பீரிஸ் ஆகியோர் தலைமையில் மக்கள் சிற்றுண்டி மற்றும் குளிர்பானம் வழங்கி வரவேற்கப்பட்டனர்.

யாழ்.அரச அதிபரின் பிரதிநிதிகளாக செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன், நிர்வாக அதிகாரி க.புத்திரசிகாமணி, மற்றும் வேலணைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் கருணாகரமூர்த்தி (மோகன்), ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் ஊர்காவற்றுறைப் பொறுப்பாளர் காந்தன், வேலணை பிரதேச சபையின் செயலாளர் மு.நந்தகோபாலன், திட்டமிடல் அதிகாரி திருமதி தி.மீரா மற்றும் வேர்ல்ட் விஷன், சோஆ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இரண்டு நாள்களுக்கு சமைத்த உலர் உணவு வழங்கப்படும் என்றும்- பிரதேச செயலர் ஊடாக விரைவில் மீளக்குடியமரும் மக்களுக்கு முதலாம் இரண்டாம் கட்டங்களாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் - என்றும் திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்தார்.

வேலணைப் பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் இரு வார காலத்திற்கு மீளக்குடிமர்ந்த மக்களுக்கு இலவசமாக குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும் - என்றார்.

அல்லைப்பிட்டி கடற்படை அதிகாரி ஜெயசிங்க மீளக்குடிமர்ந்த மக்களின் பாதுகாப்பு ஒழுங்கு - கட்டுப்பாடு குறித்து விளக்கமளித்துப் பேசினார்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'வேல்ட் விஷன்' தொண்டு நிறுவனம் 95 ஆயிரம் ரூபா பெறுமதியான 33 வீடுகளை (தற்காலிக) அமைத்துக் கொடுத்துள்ளது.

'சோஆ' நிறுவனம் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கி வருகின்றது.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் அல்லைப்பிட்டியில் மீளக்குடியமர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளது. இம்மக்கள் கடந்த 2006ஆம் ஆண்டு 11ஆம் திகதி அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்தது தெரிந்ததே. (அ-95)

## கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.22

வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப - அலுவலகத்தில் நாளையும் மறுதினமும் புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

அலுவலகப் பொறுப்பதிகாரி தி.மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா கலந்துகொள்வார். (1)

## சாவகச்சேரியில் 'கோப்சிற்றி' திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.22

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவீன விற்பனைக் கூடம் (கோப் - சிற்றி) நாளை புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி பிரதான வீதியில் உள்ள சங்கத் தலைமையகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன விற்பனைக் கூடத் திறப்புவிழா சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்துகொள்வர். (1-207)

## ஜி.சீ.ஈ. பரீட்சை தனிப்பட்ட பரீட்சார்திகளின் பெறுபேறு வந்துசேர்ந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.22

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்.மாவட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்ட பெறுபேறுகள் இன்றே பரீட்சார்த்திகளின் முகவரிகளுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளன என யாழ்.கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (202)

## தமிழக மீனவர் ஐவரும் நேற்று விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கச்சதீவுக் கடற்பகுதியில் கடந்த ஆறாம் திகதி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து தமிழக மீனவர்களும், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மாகாதேவன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

தமிழக மீனவர்களை அவர்களது படகுகளுடன் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் அருட்பணி கருணாரட்ணம்

மண்ணையும் மக்களையும் நேசித்த
எம் பங்கை விசுவாசத்தில் வளர்த்த விருட்சமே
உரிமைக் குரலே உம்மைப் பிரிந்த நாம்
உடன் உறவைப் பிரிந்ததாய் கலங்குகிறோம்.
அனைத்துக்கும் நன்றி
ஆண்டவர் இயேசுவுக்குள் சந்திப்போம்

(A) அஞ்சலித்து நிற்கும் பங்குத் தந்தையும் பங்கு மக்களும், நாவாந்துறை

## மரண அறிவித்தல்



### தனபாலசிங்கம் யோகாம்பிகை

வடலியடைப்பைப் பிறப்பிடமகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் யோகாம்பிகை நேற்று (21.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஒலிவர்)- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் தனபாலசிங்கத்தின் (ஓய்வு பெற்ற லிகிதர்) அன்பு மனைவியும் இராஜநாதன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்), மனோரஞ்சிதத்தின்(ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புச் சகோதரியும் சந்திரவதனி, விநோதினி, இரவீந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மைலநாதன், ஜெயக்குமார், வரதராஜன், சிவகாமி ஆகியோரின் அன்பு மாமியும் விதுஜா, லக்சுஜன், கஜானி, தேனுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் Dr. ஆனந்தராஜாவின் (கண்வைத்தியநிபுணர்) மச்சாளும் இராசேந்திரத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திதுக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி சந்தி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

தகவல்:
தனபாலசிங்கம் (கணவன்),
குடும்பத்தினர். (B)

### வஸ்தியாம்பிள்ளை விராசிப்பிள்ளை பிரான்சிஸ்

மன்னாரைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட B.V.பிரான்சிஸ் (20.04.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லில்லி பரிபூரணம் பிரான்சிஸ் அவர்களின் கணவரும், றெஜீனா தேவமலர் ராஜகுமார்(ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), றெஜினோல்ட் சாந்தகுமார் (இ.போ.ச) ஆகியோரின் தந்தையும் நடராஜா பிரான்சிஸ் ராஜகுமார் (யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்), அசந்தா சாந்தகுமார் (ஆசிரியை, யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. காரைநகர், யா/யாழ்ற்ரன்கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், றொசான், றொசானி, றொசானா, நிதர்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 2 மணிக்கு ஜெபவழிபாட்டுடன் மாலை 3 மணிக்கு சலோசியர் ஆலயத்தில் திருப்பலி பூசையின் பின் கராச்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சலோசியர் கோவில் வீதி,
சங்கானை.

(73393)

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

நவாலி தெற்கைச் சேர்ந்த றொயினி சுஜித்தா இயேசுதாசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (737042340V), விசேட அ.அட்டை, வலயக் கல்விப் பணி மனை அ.அட்டை, பாடசாலை அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் [illegible] வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### அருட்திரு எம்.சேவியர் கருணாரட்ணம் அடிகளார்



அருட்திரு.எம்.சேவியர் கருணாரட்ணம் அடிகளார் நேற்று முன்தினம் 20.04.2008 இல் வவுனிக்குளத்தில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் அருட்திரு M.ஞானரட்ணம் (உரோமாபுரி) அவர்களின் அன்புச் சகோதரனாவார்.

இவரின் திருவுடல் இறைமக்களின் அஞ்சலிக்காக கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் வைக்கப்பட்டு, இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆன்ம இளைபாற்றிற்காக ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு வவுனிக்குளம் புனித வேளாங்கன்னி ஆலய வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக யாழ்.பேராலயத்தில் இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், இறைமக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C)

தகவல்:
அருட்திரு.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
குரு முதல்வர்

### இளையதம்பி மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மாணிக்கவாசகர் நேற்று (21.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசரட்ணம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய எழுது வினைஞர்) அவர்களின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.04.2008) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
(73392) பொ.இராசரத்தினம் (சகோதரர்)

### திருமதி ராஜேஸ்வரி பஞ்சநாதன்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேஸ்வரி பஞ்சநாதன் நேற்று (21.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சநாதனின் அன்பு மனைவியும், குணதாஸ் (தவில் வித்துவான்), மகேசன் (லண்டன்), சிவதாஸ் (நாதஸ்வரம்), பஞ்சநந்தீஸ்வரி, தவமலர், ஆயிலியம் ஆகியோரின் தாயும், ஜெயராணி, ராதா, செல்வரஞ்சினி, கனகசபாபதி, சாமிநாதன், கோவிந்தராசா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

(73394)

தகவல்:
சிவதாஸ் (மகன்)

### கந்தையா மகாதேவன்



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் 84/6, தபாற்கந்தோர் லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் நேற்று (21.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும், அமரர் விஜயரத்தினம் - மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், கலாநிதியின் அன்புக் கணவரும், ரதீபன் (East London University, London), ரஜீவன் (East London University, London), யசோநிதி, மதுரா (மாணவி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர்களான நாகேஸ்வரி (ராதா), பத்மாவதி மற்றும் இரகுநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், நித்தியானந்தன் (ஜேர்மனி), அமரர் இரவிச்சந்திரன், ஜெயானந்தன் (வர்த்தகர்), கருணானந்தன் (சுவிஸ்), விஜியேந்திரி ஆகியோரின் மைத்துனரும், கலைவாணி, தர்மலெட்சுமி, சுகந்தினி, குமுதினி, சிவாஜினி, விக்னேஸ்வரி, தர்மராஜா (நெடுந்தீவு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84/6, தபாற்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

தகவல்:
மனைவி, பிள்ளைகள். (73406)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளையும் இந்தியாவையும் பீடித்திருந்த தோஷம் பிரியங்கா - நளினி சந்திப்பால் அகலக் கூடுமோ?



ஈழப்போராட்டத்திற்கும் இந்தியாவுக்கும் மிக நெருங்கிய நீண்டவரலாறுஉண்டு. இக்காலச் சக்கரத்தில் இந்திரா குடும்பத்தின்பங்களிப்பும் அளப்பரியது. தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் நடிகர் மறைந்த மக்கள் திலகம் டாக்டர் எம்.ஜீ. ஆருக்கும் இந்திராகாந்தி குடும்பத்துக்கும் அக்காலகத்தில் இருந்த வலுவான அரசியல் பிணைப்பு ஈழப்போராட்டத்தின் வளர்ச்சியை வேகப்படுத்தி இருந்தது என குறிப்பிட்டால் மிகையாகாது.

அப்போது ஈழப் போராளிகள் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டதன் பின்னணியில் விடுதலைப் புலிகளின் கை ஈழத்தில் ஓங்கிய போது 1987இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் வரலாற்றுபதிவானது. இவ் ஒப்பந்தம் புலிகளையும் இந்தியாவையும் நேர் எதிரே பகைத்துக் கொள்ள வைத்தது. இதை தொடர்ந்து இந்தியா ஈழத்தமிழர்கள் மீதான தனது அக்கறையை குறைத்துக் கொள்ள நேர்ந்தது. பின்னர் 1991 மே 21 இல் இடம்பெற்ற இந்திய பிரதமர் ராஜீவ் படுகொலை ஈழத்தமிழர்களை இந்தியா காறி உமிழ்கின்ற அளவுக்கு நிலைமையை சிக்கலுக்குள்ளாக்கியது.

விடுதலைப் புலிகள் மீதான வெறுப்பு உணர்வும் இந்தியர்கள் மத்தியில் அதிகரித்தது. இந்திரா குடும்பத்தின் எதிர்ப்பையும் புலிகள் சம்பாதித்துக் கொண்ட நிலையில் விடுதலைப் புலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட்டனர்.

இதேவேளை ராஜீவ் கொலை குற்றவாளிகளாகத் தீர்ப்பிடப்பட்ட சிவராசன் தனு,சுபா, ஹரிபாபு, முருகன், நளினி ஆகியோரில் நளினி, முருகன் தவிர்ந்த ஏனையோர் இப்போது உயிருடன் இல்லை. நளினி மற்றும் முருகனுடன் ராஜீவ் படுகொலை விவகாரம் மூச்சை இழந்து விடும் என எதிர்பார்க்கும் நிலையில் அண்மையில் இடம்பெற்ற நளினி - பிரியங்கா சந்திப்பு இந்திய அரசியலில் மற்றொருதிருப்பத்தைத் தரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

ராஜீவ் படுகொலைக் குற்றவாளியாகத் தீர்ப்பிடப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நளினிக்கு ஆயுள் தண்டனை வழங்கும்படி அவரது குடும்பப் பின்னணியை ஆதாரம் காட்டி நீதிமன்றுக்கு ஆவன செய்தார் ராஜீவ் பாரியார் சோனியா.

17 வருடங்களாகச் சிறையில் புலம்பிக் கொண்டிருக்கும் நளினியை, படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா கடந்த மார்ச் 19ஆம் திகதி வேலூர் மத்திய சிறையில் சந்தித்துள்ளார்.

இதற்கான முன் ஆயத்தங்களை இந்திய மத்திய உளவுப் பிரிவு மேற்கொண்டிருந்த நிலையில் இச்சந்திப்புக் குறித்து இந்தியப் பத்திரிகைகள் கடந்த வாரங்களில் விலாவாரியாக எழுதித் தள்ளியிருந்தன. இச்சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் நளினி, பிரியங்கா தனக்கருகில் இருந்து அன்புடன் பேசியது சற்று ஆறுதல் தருவதாகக் கூறி இருந்தாலும் இதில் பல விடயங்கள் தொக்கி நிற்பதை துப்பறியக் கூடியதாக உள்ளது.

## இந்திய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சந்திப்பு

நளினி - பிரியங்கா சந்திப்பில் முக்கிய பாத்திரத்தை வகித்திருக்கும் இந்திய மத்திய உளவுப் பிரிவு 17 வருடங்களாக சிறைக்குள் புலம்பிக் கொண்டிருக்கும் நளினியிடமிருந்து விடுதலைப் புலிகள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்று கொள்வதற்கான தந்திர நகர்வாக இச் சந்திப்பைக் கையாண்டிருப்பதாக நோக்குவதோடு மறுபக்கத்தில் ஈழத்தமிழர்களின் கூக்குரல்கள் இந்தியாவின் காதுகளை அடைப்பதாலும் இந்திய அரசியலில் செல்வாக்கு செலுத்தும் இந்திரா குடும்பத்தினர் மத்தியில் வேதனையை உண்டுபண்ணு வதாகவும் அவதானிக்க முடிகிறது.

இதேவேளை மேற்குலக அகலக்கண் இலங்கைமீது விரிந்திருப்பதால் இதுவரை இலங்கை விவகாரத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வரும் இந்தியாவின் நிகழ்ச்சி நிரலில் எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் எனவும் எதிர்பார்க்கலாம்.


தமிழ் நாட்டில் இடம்பெறுகின்ற ஈழத் தமிழர் ஆதரவுக் கோசங்கள் இந்திய மத்திய அரசை ஈழத்தமிழர் விவகாரத்தில் அனுதாபத்தை ஏற்படுத்துகிறது எனவும் பார்க்கலாம். அத்தோடு நளினி - பிரியங்கா சந்திப்பின்போது இருவரும் ஒரு பாத் திரத்தில் தண்ணீர் அருந்தியமை நளினியை ராஜீவ் குடும்பம் மன்னித்து விட்டதென்பதையும் உலகுக்குப் பறைசாற்றி நிற்கிறது. இதிலிருந்து நளினிக்கு விடிவு தொலைவில் இல்லை என்பது தெளிவாகிறது.

முன்னாள் இந்தியப் பிரமர் இந்திரா காந்தியின் உயிரைப் பறித்ததும் அதே இந்திய தேசத்தில் பிறந்த பகவத்சிங் என்பதையும் இந்தியாவில் சுதந்திரத்துக்கு உழைத்த தேசபிதா மகாத்மா காந்தியும் அதே இந்திய மண்ணில் தான் பிறந்தவர்கள்என்பதையும்கோடிட்டுக் காட்டி இந்த விவகாரத்தை இந்தியா நேர்த்தியான வழியில் நகர்த்தக்கூடும்.



அத்தோடு இந்திரா குடும்பத்தின் கௌரவத்தையும் உலகறியச் செய்வதோடு ராஜீவ் கொலைக்குப் பின்னர் விடுதலைப் புலிகளையும் இந்தியாவையும் பீடித்திருந்த பகை தோசம் கால ஓட்டத்தில் அகலக்கூடும் எனவும் எதிர்பார்க்கும் இதேவேளை, ஈழத் தமிழர் நலனில் இந்தியா மீண்டும் அக்கறை காட்டத் தலைப்படும் என்பதையும் நளினி பிரியங்கா சந்திப்பு உணர்த்தி நிற்கும் இதே வேளை நளினி - பிரியங்காவுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பு குறித்து வேதனை அடைந்திருக்கிறார் நளினியின் கணவர் முருகன். இச்சந்திப்பால் முருகன் - நளினி உற வில் சற்று விரிசல் ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியானதை வேலூர் மத்திய சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நிராகரித்துள்ளனர். ✱







யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகு 'சுகவாழ்வு' என்னும் தலைப்பில் பொது விரிவுரைத் தொடர் ஒன்றை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தி வருகின்றது. அதன் ஐந்தாவது தொடர் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா உரையாற்றுவதை முதலாவது படத்திலும் வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன், வைத்திய நிபுணர் பேரானந்தராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: நாயகன்)

# என்னை வளர்த்த கிராமம் தாய் போன்றது அதனை வளம்படுத்த வேண்டும் என்பதே அவா



நான் பெற்ற கல்வியுடன், என்னை வளர்த்த கிராமம் என்னைப் பெற்ற தாயைப் போல விசேடமானது. எனவே எனது கிராமம், எனது பிரதேச வளம் என்பவற்றை மேலும் வளப்படுத்தவேண்டும். இதுவே எனது இளமைக் காலம் தொடக்கம் எனது அவாவும் - எனது குடும்பத்தின் அவாவும் ஆகும்.

இவ்வாறு தெரிவித்தார் வரணி மகாவித்தியாலயத்திலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி 10'ஏ' பெறுபேறுகளைப் பெற்ற செல்வன் அம்பிகாநிதி கோகுலன். அவர் மேலும் கூறியதாவது:

எனது அப்பாவும் அம்மாவும் எனது கல்விக்கு அடித்தளமிட்டு ஊக்கப் படுத்தினார்கள். அத்துடன் எனது சிறிய தந்தையார்களும் ஊக்கமளித்தார்கள். எனது குடும் பத்தவர்களும் கல்வி உயர்வை நோக்கமாகக் கொண்டவர்கள்.

எமது பிரதேசம் சிறிய, மிகவும் பின்தங்கிய வரணி வடக்குப் பிரதேசமாகும். வீட்டில் மின்சார வெளிச்சம் இல்லை. ஆனால் அதனை பொருட்படுத்தாமல் குப்பி விளக்கின் ஒளியில் இரவில் என் கல்வியைத் தொடர்ந்தேன். எனது உயர்தரக் கல்வியை நான் தொடர்வதற்கு எனது தாய்ப் பாட சாலையான வரணி மகா வித்தியாலயத்தில் கற்கமுடியவில்லை. இதனால் நான் மிகுந்த கவலையடைகின்றேன். ஏனெனில் அங்கு கலைப்பிரிவு மட்டுமே உள்ளது. ஏனைய வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகள் அங்கு இல்லை. இந்த நிலையில் நான் வர்த்தகம் கற்க விரும்புவதால் வேறுபாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது மிகவும் துரதிஷ்டவசமானதே.

## குப்பிவிளக்கில் படித்து 10'ஏ' பெற்ற வரணி மாணவன் கோகுலன் சொல்கிறார்

வீட்டில் கல்வியை மாலை 7 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை படிப்பது வழக்கம். வீட்டில் அம்மா, அப்பா உந்துதல் செய்யும் வேளை நித்திரை ஏற்படின் பத்திரிகை வாசிப்பேன், கவிதை எழுதுவேன், குறு நாடகம் தயார் செய்வேன். நித்திரை கலைந்துவிடும். தொடர்ந்து படிப்பைத் தொடர்வேன். எனது கல்வி மேம்பாட்டிற்கு எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், உயர்தர மாணவ, மாணவிகள் மிக முக்கியமானவர்கள். அத்துடன் திகழொளி கல்வி நிலையம் பலவாறாக உதவியது.

ஆசிரியர்கள் விசேட வகுப்புகள் மூலம் கல்வி புகட்டினார்கள். உயர்தர மாணவர்கள் தெரியாத விடயங்களை உரியவேளையில் சொல்லித் தருவார்கள். எமது பகுதியில் உள்ள பாடசாலைகள் மூன்று இணைந்து விசேட கருத்தரங்குகளை நடத்தின. இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிர மணிய வித்தியாசாலை, மிருசுவில் அ.த.க.பாடசாலை, வரணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து கல்விக் கருத்தரங்குகளை மூன்று பாடசாலை ஆசிரியர்களும் நடத்தினார்கள். நான் ரியூசன் கல்வியில் ஆங்கிலம், கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களை மட்டுமே படித்தேன். மிகுதிப் பாடங்களை நான் பாடசாலை மூலம் கற்றேன்.

யாழ்.வானொலி எவ்.எம்., கல்விச்சுடர் மூலம் நிறையப் பயன் பெற்றேன். பாடவிதானம் தவிர்ந்த போட்டியில் பங்குபற்றினேன். தமிழ்தினப் போட்டிகளில் குறுநாடகப் பிரதியில் வலய மட்டத்தில் முதலாவது இடமும் பெற்றேன். மாவட்ட மட்டத்திலும் 1ஆவது இடம் பெற்றேன், மாகாண மட்டத்திலும் பங்குபற்றியுள்ளேன். ஆங்கிலக் கவிதைப் போட்டியில் பங்குபற்றி வலய மட்டத்தில் 2ஆம் இடம்பெற்றேன். கலையார்வத்திற்கு அம்மாவே காரணமாவார். விளையாட்டுக்களில் மைதான விளையாட்டுக்களில் அதிகம் விருப்பம் உண்டு.

எமது உயர்ச்சி, முயற்சியில் தங்கியுள்ளது. நான் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தி யடைந்ததை பெரிய உயர்ச்சியாக மனதில் எண்ணக் கூடாது. நாம் கல்வியில் படிப்படியாக முன்னேறவேண்டும். வருங்காலங்களில்தான் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். ஜி.சீ.ஈ. சாதாரணதரம் கல்வியில் முதற்படியே. (131)

# பள்ளிப் படிப்பும் அம்மம்மாவின் ஆதரவும் 10'ஏ' பெறுபேறுக்கு உதவி புரிந்தனவாம்

## மகிழ்ச்சியுடன் கூறுகிறார் யூனியன் கல்லூரி மாணவன்



பரீட்சையில் நான் வெற்றி பெறுவதற்கு காரணமாக இருந்தவர் எனது அம்மம்மா ஆவார். இரவு நேரத்தில் படிக்கும் வேளையிலும் சரி அதிகாலையிலும் சரி என்னுடன் தானும் நித்திரை கொள்ளாது கூடவே இருப்பார். இதேபோன்று ஆங்கிலத்தையும் எனக்குக் கற்பித்தார் எனக் கூறுகின்றார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கற்கும் ஜெகநாதன் சந்துருகேசன். இவர் கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 10'ஏ' பெற்ற மாணவன் ஆவார்.

இவர் மேலும் கூறுகையில், தான் ஒரு பொறியியலாளராக வர வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டார். தங்களுடைய உறவினர்கள் பலரும் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் கலைப்பட்டதாரிகளாகவுமே காணப்படுகின்றார்கள் என்றும் இந்த நிலைமையில் தான் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பதில் பெரும் விருப்புடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

சிறுவயதிலிருந்தே கணிதத்துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்துள்ள இவர் தொடர்ந்தும் கணிதத்துறையில் கற்கவேண்டும் என்பதில் அக்கறையும் கொண்டவராகத் தெரிகின்றார்.

பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற ஆங்கில தினப் போட்டிகள் முதல் மாகாண மட்டப் போட்டிகள் வரை சென்று தமது திறமைகளை வெளிப்படுத்தி சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

அண்மையில் கூட ஆங்கிலத்தில் ஒப்படைத்தல் போட்டியில் வலய மட்டத்திலான பரிசிலைப் பெற்றுள்ளார். அதேபோன்று கல்வித் திணைக்களம் நடத்திய கணனி மென்பொருள் ஆக்கப் போட்டியில் கலந்துகொண்டு மாகாண மட்டத்தில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாக ஆங்கில மொழியிலான எழுத்துப் போட்டியில் பரிசில்களைப் பெற்று வருகின்றார். தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதில்லை.

பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களின் கற்பித்தலுடன் வீட்டில் கற்பதும் அதற்கு வழிகாட்டியாக அம்மம்மா வழிகாட்டியதுமே தனது இந்தப் பெறுபேற்றிற்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.

தரம் 5 வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தரம் 6 முதல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார்.

பண்ணிசைப் போட்டிகளிலும் கலந்து பரிசில்களைப் பெற்றுக்கொண்டுள்ள இவரின் தாயார் ஒரு சங்கீத ஆசிரியை என்ற வகையில் இவரும் நல்ல குரல் வளத்துடன் பாடும் திறமை கொண்டவராகக் காணப்படுகின்றார். (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் போற்றுதற்கு உரியவர்கள்

## வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் இராசையா பாராட்டுகிறார்



யாழ்ப்பாணம்,ஏப்.22

கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்து திட்டமிட்டுச் சேவையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்றுமே போற்றுதற்குரியவர்கள்.

மனிதப் பிறவியை பயனுள்ள பிறவியாக்கிக் கொள்வதற்குக் கல்வியே ஆதாரமாக உள்ளது.

இக்கல்வியைச் சரிவரப் பெறும் மாணவர் சமுதாயத்தினர் ஒழுக்கசீலர்களாகவும் சிறந்த நற்பிரஜைகளாகவும் எதிர்காலத்தில் விளங்குவர்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா. வட்டு. இந்துக் கல்லூரியின் அதிபர் ச.இராமலிங்கத்தின் சேவைநலன் பாராட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: அதிபர் இராமலிங்கத்தின் சிறந்த திட்டமிடுதலாலும் கட்டுக்கோப்பான செயற்பாடுகளாலும் இக்கல்லூரி வளர்ச்சி பெற்று மாணவர்களின் கல்வி நிலை அபிவிருத்தியடைந்துள்ளது.

இவரது காலம் இக்கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் என்றால் மிகையாகாது.

பாடவிதானம், இணைப்பாட விதானம் ஆகியவற்றின் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சியை ஏற்படுத்தி கல்லூரியை சமூக மயப்படுத்திய இவரே "நவோதயா" பாடசாலையாக தரம் உயர்ந்து வளர வழிகோலியவர்.

மாணவர்கள் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் க.பொ.த உயர்தரத்தில் முன்னிலைப் பெறுபேறுகளை பெறுவதற்கும், பல்கலைக்கழகம் செல்வதற்கும் இவர் மேற்கொண்ட அரிய முயற்சிகளை மறந்துவிட முடியாது - என்றார்.

வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுகையில்: நெருக்கடி மிக்க காலகட்டத்திலும் கல்விச் செயற்பாடுகள் தளர்வின்றி நடைபெறுவதற்கு இவர் துணிந்து ஆற்றிய பணிகள் என்றும் நினைவு கூரத்தக்கவை.

சிறந்த நிர்வாகியாக திகழ்ந்த இவரின் செயற்பாடுகள் மாணவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும் நல்லொழுக்கத்தை பேணுவதற்கும் உந்து சக்தியாக அமைந்துள்ளன-என்றார்.

வலிகாமம் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் உரையாற்றுகையில்:

இப்பிரதேசத்திலுள்ள மத்திய தர மற் றும் வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு இவர் அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளதை நான் நன்கு அறிவேன்.

வகுப்புகளுக்கு நேரில் சென்று அங்கு நடைபெறும் கற்றல் செயற்பாடுகளையும், மாணவர்களின் ஒழுக்கத்தையும் கண்காணித்து வருவதில் ஏனைய அதிபர்களுக்கு முன்மாதிரியானவராக தமது பதவிக் காலத்தில் இவர் செயற்பட்டிருக்கின்றார்.

மாணவர்களும் ஆசிரியர்களும் குறிப்பிட்ட நேரத்தில் கல்லூரிக்கு சமூகமளிக்க வேண்டும் என்பதில் மிகக் கண்டிப்புடன் இருந்தவர்.

சமூகத்தை பிணைத்து தன் வசப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்று கல்லூரியை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதிலும் இவர் வல்லவராக விளங்கினார் - என்றார்.

சங்கானை கோட்ட கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு உரை நிகழ்த்துகையில்:

இக்கல்லூரியில் கணனி கற்கைநெறியை சிறப்பான முறையில் செயற்படுத்தி மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொடுப்பதில் அதிபர் அதிக கவனம் செலுத்தி வந்துள்ளார். கல்லூரி செயற்பாடுகளில் கண்டிப்பாக இருந்தாலும் இளகிய உள்ளம் படைத்தவர்.

26 வருடகாலம் இங்கு பணியாற்றி இக்கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கு அரும்பாடுபட்ட இவரின் சீரிய சேவைகளை கல்விச் சமூகம் என்றும் மறந்து விட முடியாது - என்றார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் விழா நாயகர் மங்கள வாத்தியங்கள் சகிதம் மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் எஸ்.ரி.கென்ஸ்மன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்விசாரா ஊழியர்கள் சார்பில் முகாமைத்துவ உதவியாளர் இ.வசந்தன், சிரேஷ்ட மாணவர் மன்ற தலைவர் தெ. திலக், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர் வே.சிவலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் உரையாற்றினர்.(203-135)

## மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் மாணவி காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வீதியில் நான்கு மிதிவண்டிகள் சமாந்தரமாகச் சென்றவேளையில் வளைவொன்றில் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் சைக்கிள் ஒன்று மோதி மாணவியொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை மட்டுவிலில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சிந்துஜா (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார்.

தனியார் வகுப்பு முடிந்து வீடு திரும்பியவேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (202-207)


### தவறிவிட்டது

விஸ்வலிங்கம் கௌசிகன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (890490204 V) விசேட அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் 19.04.2008 அன்று சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்ஸிலே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தயாளன் தனுஷியா, தேநீர்சாலை, பஸ் நிலையம் அருகில், யாழ்ப்பாணம். (73382)

வி.கௌசிகன், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி 0779360571

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 25 ★ 07 ★ 1934



ஆண்டவன் மடியில் 23 ★ 03 ★ 2008

அமரர் சிவகுரு சிவரத்தினம்

23.03.2008 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் அளித்தோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிழக்கு வளவு, மல்லாகம். (73380) குடும்பத்தினர்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக நிரந்தர நியமனம் பெற்று, தற்பொழுது தற்காலிக நியமனமாக யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் கடமை ஆற்றும்

திருமதி பவானி உமாவாகீசர்

அவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் M.A Tamil சித்தியடைந்ததையிட்டு மனமார வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: கணவர், அப்பா,அம்மா, சகோதரர்கள் மற்றும் சகோதரி.

(சி/552493)

### கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்

வேலாயுதபிள்ளை கிருஸ்ணகாந்தன்

அவர்கள் 20.04.2008 அன்று காலமானதையிட்டு துயரடைவதுடன் அவரின் தாங்கமுடியாத இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர், சக உத்தியோகத்தர்கள்.

வீதி அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம். (73372)

### கண்ணீர் அஞ்சலி



அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் (கிளி)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அவரது பேரிழப்பினால் துயரடைந்து இருக்கும் அடிகளாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவிப்பதுடன் அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

* இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு ஆயர் தலைமையில் யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
* 26.04.2008 சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி தேவ மாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கரவை பங்குத் தந்தையும் பங்கு மக்களும்.

கரவெட்டி. (சி/552492)


## தெங்கு உற்பத்தி, அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22

தெங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 29ஆம் திகதி வேலணையில் இடம்பெறவுள்ளது.

தெங்கு அபிவிருத்தி சபையின் அதிகாரிகளால் மேற்படி கருத்தரங்கு நடத்தப்படும் என வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகள் சம்மேளன நிர்வாகிகள் கடற்றொழில் சங்க உறுப்பினர் உட்பட 60 பேர் பங்குபற்றவுள்ளனர்.

தென்னம் நாற்று தேவைப்படுவோர் மேற்படி கருத்தரங்கின் பின்னர் பதிவு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203-95)

## புத்தூர் சந்தியில் கமநலசேவை நிலையம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

சாவகச்சேரி- புத்தூர்ச் சந்தி கமநல சேவை நிலையத்தில் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாவட்ட விதைநெல் களஞ்சியம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.அரச அதிபர் க.கணேஷினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வு யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் விவசாயசம்மேளனதலைவர்கள், பொதுமக்கள்திணைக்களஅதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

களஞ்சியத்தில் விதை நெல்வகைகள் சேமித்து களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. (203-[illegible])


இந்தியாவில் படியுங்கள்

### பிரிந்தாவன் கல்லூரி

அரசின் அங்கீகாரம் AICTE அனுமதியும்பெற்றது மற்றும் பங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது

Accredited at the 'A' level by NAAC
Email : info@brindavancollege.com
enquiry@brindavancollege.com
Website : www.brindavancollege.com

FREE SEMINAR & SPOT ADMISSIONS at COLOMBO

| VENUE | DATE | TIME |
|---|---|---|
| COLOMBO HILTON | 27.04.2008 | 2.30 p.m. |

With 2 A/L Passes

UNDERGRADUATE COURSES
* B.Sc. - COMPUTER SCIENCE, Physics, Maths
* B.Sc. - COMPUTER SCIENCE, Statistics, Maths
* B.Sc. - MICROBIOLOGY, Chemistry, Zoology
* B.Sc. - BIOTECHNOLOGY, Chemistry, Zoology
* B.Sc. - GENETICS, Biochemistry, Microbiology
* B.C.A - Bachelor of Computer Applications
* B.B.M - Bachelor of Business Management
* B.Com - Bachelor of Commerce

POSTGRADUATE COURSES
* M.Sc. - Biotechnology
* M.Sc. - Microbiology
* M.Sc. - Applied Genetics
* MBA Master of Business Administration
* MCA Master of Computer Applications

PRE - UNIVERSITY COURSES ( Equivalent to A level )
SCIENCE : PCMCs / PCMB / PCBHs COMMERCE : BACS

இலங்கையைச் சேர்ந்த 250 மாணவர்களுடன் படியுங்கள். இக்கல்லூரியில் சுமார் 600 இலங்கை மாணவர்கள் கல்விகற்றுப் பட்டம் பெற்றுள்ளார்கள்.
பட்டங்கள் இலங்கை பல்கலைக்கழக மானியக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டது.


Building of Brindavan College of Engg., Dwarakanagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63. Email : info@brindavancollege.com


Brindavan College of MBA/MCA, Dwarakanagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63. Email : info@brindavancollege.com



Brindavan College of UG & PG, Vinayaka Layout, Bhoopasandra, RMV 2nd Stage, Bangalore - 94. Email : info@brindavancollege.com

For Details Contact : Company Secretarial Services (Pvt) Ltd.
#285C- 1/1 Stanley Tillakaratne Mw., Nugegoda. Tel : 011-4580270 / 0777-317043
Join this year - Save one year


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மடுமாதாவின் திருவுருவச்சிலை அகற்றப்பட்டமைக்கு சிறிலங்காவும் அனைத்துலக நாடுகளும்தான் பொறுப்பு!

## அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்திருந்தார்



மடு மாதாவின் திருவுருவச் சிலை அகற்றப்பட்டதற்கு சிறிலங்காவும் அனைத்துலக நாடுகளும்தான் பொறுப்பு. வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர் அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் கடந்த 6 ஆம் திகதி ஒளிபரப்பாகிய "நிலவரம்" நிகழ்ச்சியில் பங்கேற்ற கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளவற்றின் முக்கிய பகுதிகள்:-

மடு ஆயரின் நிலைப்பாடு பற்றி ஒரு தெளிவான உண்மையினைக் கூற விரும்புகின்றேன்.

வன்னியைக் கைப்பற்ற வேண்டும் என்கின்ற முனைப்புடன் போர்நிறுத்த ஒப்பத்தத்தின்போது செய்யப்பட்ட எல்லை வரையறைகளில் இருந்து ஓர் அங்குலம் கூட உள்ளே நுழைய முடியாது சிறிலங்கா அரசாங்கம் திணறியது.

அதாவது, முகமாலைப் பகுதியினை அல்லது புளியங்குளம் பகுதியினை அல்லது மணலாற்றுப் பகுதியினை எடுத்துக்கொண்டால் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டபோது இருந்த வரையறைகளில் இருந்து ஒரு சென்ரி மீற்றர் கூட நகர முடியாத சிறிலங்கா அரசாங்கம் வன்னிக்குள் நுழைவதற்கான இலகுவான பாதையாக மன்னார்ப் பகுதியின் மடுவைத் தேர்ந்து எடுத்திருக்கின்றது.

**வன்னிக்குள் நுழைவதற்கான பாதையை அமைப்பதே அரசாங்கத்தின் நோக்கம்**

மடுவினை நோக்கி தாம் நகர்கின்ற போது மடுவினையும் அதன் புனிதத்தன்மையையும் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகக் கத்தோலிக்க மக்களால் அழுத்தம் கொடுக்கப்பட்டு விடுதலைப் புலிகள் அப்பகுதியினை விட்டு விலகிக்கொள்வர். அதனை வாய்ப்பாகக் கொண்டு வன்னிக்குள் நுழைவதற்கான மிகப்பெரிய ஒரு பாதையினை அமைத்து விடுவதற்கான ஒரு கனவாகத்தான் சிறிலங்கா அரசாங்கம் இதனைத் தொடங்கியிருந்தது என்பதனை நான்தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றேன்.

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகி இத்தனை காலங்கள் ஆகியும் தனது படை நகர்வினைச் சிறிதேனும் செய்ய முடியாது படுதோல்விகளையும், படுமோசமான இழப்புகளையும் கண்டிருக்கின்றது சிறிலங்கா அரசாங்கம். அத்துடன் அனைத்துலக ரீதியிலும், சிங்களவர்கள் மத்தியிலும், இராணுவத்தினர் மத்தியிலும் பல மனஉளைச்சல்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்றது சிறிலங்கா அரசாங்கம். ஆதலால்தான் மடு தேவாலயத்தின் பகுதியின் ஊடாக வன்னிக்குள் நுழைவதன்மூலம் வன்னியைக் கைப்பற்றி விடுவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர்.

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை அதாவது, போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமைவான எல்லையை உடைத்து வருகின்றபோது விடுதலைப் புலிகள் அதனைத் தடுத்து நிறுத்துகின்ற உரிமையுடையவர்களாகத்தான் இருக்கின்றனர்.

> **மடுமாதாவின் திருவுருவச் சிலை அகற்றப்பட்டமை தொடர்பாகத் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் கடந்த 6 ஆம் திகதி ஒளிபரப்பாகிய "நிலவரம்" நிகழ்ச்சியில் கருணாரட்ணம் அடிகளார் தெரிவித்த கருத்துகள் இவை. இவர் நேற்று முன்தினம் மல்லாவி - மாங்குளம் பகுதியில் இடம் பெற்ற கிளைமோரில் பலியானமை தெரிந்ததே.**

தமிழ் மக்களுக்குக் கடமைப்பட்டும் இருக்கின்றனர். விடுதலைப் புலிகள் இதனைச் செய்யாதுவிட்டால் தமிழ் மக்களிடமிருந்தும் பலத்த கண்டனங்களைப் பெற்றிருப்பர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து சிறிலங்கா அரசாங்கம் விலகிக்கொண்டாலும் விடுதலைப் புலிகளுக்கு அந்த எல்லையிலிருந்து அதாவது, சிறிலங்காப் படையினரை உள்ளே விடுவதற்கான எந்தவித கடப்பாடும் கிடையாது.

**போர்நிறுத்தத்திலிருந்து விடுதலைப் புலிகள் விலகக்கூடாது என்பதே தமிழரின் விருப்பம்**

அவர்களுக்கு அந்த உரிமை இல்லை. போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விடுதலைப் புலிகள் விலகக்கூடாது என்றுதான் இன்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அதனால்தான் விடுதலைப் புலிகள் விலகாது இருக்கின்றனர்.

சிறிலங்கா அரசாங்கம் மடுவை ஒரு தளமாகப் பாவித்து விடுதலைப் புலிகளின் கைகளைக் கட்டவைத்து,மடு தேவாலயத்தின் உன்னதமான புனிதத் தன்மை விடுதலைப் புலிகளாலும் பாதிக்கப்பட்டது என்ற அவப்பெயரை ஏற்படுத்தினால் விடுதலைப் புலிகள் பயப்படுவர்.

அதன் ஊடாக வன்னிக்கு மிகச் சுலபமாக நுழையலாம் என்ற கனவினைத்தான் சிறிலங்கா இராணுவத்தினர் கண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் அதில் படுதோல்வி அடைந்திருக்கின்றனர்.

மடு மாதாவின் திருச்சொரூபம் எடுக்கப்பட்டதற்கு சிறிலங்கா அரசாங்கம்தான் முழுமையான பொறுப்பு எடுக்க வேண்டும்.

சிறிலாங்கா அரசாங்கம் இந்த விடயத்தினை செய்யக்கூடாது என்று எந்தவொரு அனைத்துலக நாடாவது அவர்களுக்கு புத்திமதி கூறியிராதுவிட்டால் அவர்களும் அந்தப் பொறுப்பினை ஏற்க வேண்டும்.

ஆயர் , மிகத் தெளிவாக கூறிக்கொண்டிருக்கின்றார். இந்த இடம் அமைதிக்கான இடம். இந்த அமைதியினை சிறிலங்கா அரசாங்கம் குழப்ப வேண்டாம். ஏனெனில் இது விடுதலைப் புலிகளின் கடடுப்பாட்டுப் பிரதேசத்தின் கீழ்தான் இருக்கின்றது. இது ஒன்றும் சிறிலங்கா அரசிடமிருந்து விடுதலைப் புலிகளால் வன் பறிப்புச் செய்யப்பட்ட இடம் அல்ல.

சிறிலங்கா அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் கூட. அன்று ரணில் அரசு ஒப்பந்தம் செய்திருந்தாலும் அந்த ஒப்பந்தத்தினை அன்றைய அரச தலைவர் சந்திரிகா அதனை ஏற்றுக் கொண்டிருந்தார். அன்று, அனைத்துலக சமூகமும் ஏற் றுக் கொண்டிருந்தது. ஆகவே, ஆயரின் நிலைப்பாடு மிகத் தெளிவானதும், மிகச் சரியானதும் கூட.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இராணுவம் நுழையக் கூடாது. நுழைந்து அந்த இடத்தினைக் குழப்பக்கூடாது. ஆகவே அமைதி வலயமாக அரசாங்கம் மதித்து அங்கே தனது படை நடவடிக்கைகளைச் செய்யக்கூடாது என்று வலியுறுத்தியிருக்கின்றார். தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார். இதனைத்தான் கத்தோலிக்க மக்கள், தமிழ் மக்கள் அனைவரும் வலியுறுத்துகின்றோம்.

வன்னிக்குள் பிரவேசிப்பதற்கான பாதையாக மடுத் திருப்பதியினைத் தெரிந்து கொள்ளாமல் பல்வேறு இடங்களை சிறிலங்கா அரசாங்கம் தெரிந்து எடுத்திருக்க முடியும். அங்கே தோல்வியைக் கண்டிருக்கின்றனர். அதுதான் உண்மை.

**வத்திகானின் நிலைப்பாடு என்ன?**

வத்திகான் என்பது ஒரு அரசு. ஒரு மதத்தின் தலைமைப்பீடம். அவர்கள் அரசு என்கிற ரீதியில் சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தேவையான செய்தியினை நிச்சயமாகக் கொடுத்திருப்பார்கள். அதனை அவர்கள் விளம்பரப்படுத்துவதில்லை.

ஆனால் மதத்தலைவர் என்ற ரீதியில் இதனைக் கிறிஸ்தவர்களுக்குச் செய்கின்ற வதையாகவும் கொடுமையாகவும் அவர்கள் கண்கொண்டுபார்ப்பார்கள் என்பது நிச்சயமானது. இதற்கு சிறிலங்கா அரசாங்கம் பெரிய விலை ஒன்றையும் பெற வேண்டியிருப்பது என்பதனையும் வத்திகான் நிச்சயமாக நம்பும். அப்படித்தான் வத்திக்கான் மதப்பீடத்தின், ஆன்மீகப் பீடத்தின் செயற்பாடும் இருக்கின்றது. அப்படித்தான் வெற்றியும் கண்டிருக்கிறது.

ரஷ்யாவிலும், சீனாவிலும் நடைபெற்ற கொம்யூனிசியப் புரட்சியினையும் இன்னும் போலந்து போன்ற கத்தோலிக் கர்கள் வாழும் நாடுகளில் கொம்யூனிய ரஷ்யப் படைகள் நுழைந்து அங்கே இருந்த தேவாலயங்கள் அனைத்தையும் அடித்து-உடைத்து-நொருக்கி எல்லாவற் றையும் செய்தபோதும் வத்திகான் மௌனமாகத்தான் இருந்தது.

வத்திக்கான் எப்போதும் ஆன்மீக ரீதியில் அது தனது மௌனத்தின் ஊடாகத்தான் வெற்றிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையோடு உள்ளது.

கத்தோலிக்கர்களாகிய நாங்களும் நம்பியிருக்கின்றோம். எங்களைப் பொறுத்த வரையில் இன்று மடு மாதா ஆலயத்துக்கு ஏற்பட்டிருக்கும் அவலத்தை நாங்கள் மௌனத்தோடுதான் எதிர்கொள்கிறோம்.

ஆனால் அதனை அரசியல் மயப்படுத்துகின்றபோது வத்திக்கான் எப்போதும் மௌனமாகத்தான் இருக்கும்-என்று தெரிவித்திருந்தார். (203)

## சைக்கிள்களுக்கு உருமத்தகடு தென்மராட்சியில் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.22

2008ஆம் ஆண்டுக்கான சைக்கிள் உரிமத்தகடுகள் சாவகச்சேரிப் பிரதேச சபையால் வழங்கப்பட்டு வருகின்றன,

சாவகச்சேரி பிரதேச சபையின் உப.பணிமனைகளான கச்சாய், சரசாலை, வரணி, கைதடி, நாவற்குழி ஆகிய பணிமனைகளில் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுமக்களின் நன்மை கருதி - கொடிகாமம் பொதுச் சந்தையிலும் உரிமத்தகடுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-131)

## தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சு நிலையான புகைப்படக் கலைஞர் - தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது தொழிற்கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட புகைப்படவியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சு, 2ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை, என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 18.04.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.22

மொறட்டுவையில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் முழுநேரப் பயிற்சி நெறிக்கு இரு பாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்த 16-22 வயதுக்கிடைப்பட்டவர்கள் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் 'முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும், இலங்கை - ஜேர்மன் தொழிநுட்பப் பயிற்சி நிறுவகம், இல 582, காலிவீதி, கல்கிசை' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 18.04.2008ஆம் திகதிய அரச வர்த்தகமானியில் பார்வையிடலாம். (202)

* * *

கொழும்பு,ஏப்.22

இலங்கை நில அளவைத் திணைக்களம் நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 18.04.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)



ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியுடன் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் வீட்டுத்திட்டப் பிரிவினரால் கட்டுடையில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகளான [illegible] இணைந்து மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், மண்டபத்தின முகப்புத் தோற்றத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
முன்னாள் ஆசிரியரும்
பழைய மாணவியுமான
திருவாட்டி

### குயினி அரியமலர் தேவராஜா

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை. (ச/552490)

தலைவர்/செயலாளர்,
பழைய மாணவர்
சங்கம்.

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
21 ★ 07 ★ 1915



மறைவு
22 ★ 03 ★ 2008

### அமரர் கனகர் செல்லையா

**அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர்
இருப்பிடமாய் அவனியிலே வாழ்ந்த அன்புத்
தெய்வமே - ஐயாவே ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் ஐயாவின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு பல்வேறு வகைகளில் உதவி நல்கியோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் என்பவற்றில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*அல்லாரை தெற்கு,
மீசாலை. (73365)*

## கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

நாவற்குழி,ஏப்.22

கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்குவதற்கென 68ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை நோர்வே நாட்டில் வசிக்கும் கி.நமசிவாயம் என்பவர் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இத்தகவலை வளர்மதி சனசமூக நிலையத்தின் செயலாளர் செ.மதனராசன் தெரிவித்தார். (202-288)

## 'கெயர்' நிறுவனப் பணிப்பாளர் மாதகலுக்கு நேரடி விஜயம்

வலி.தென்மேற்கு,ஏப்.22

சர்வதேச 'கெயர்' நிறுவன இலங்கைக்கான பணிப்பாளர் நிக்போன்ஸ் கடந்த 16ஆம் திகதி மாதகல் வில்வளை கிராமத்திற்கு விஜயம் செய்துஅங்குள்ள வில்வளை விவசாயப் பாடசாலைக் குழுவின் செயற்பாடுகளை நேரடியாகப் பார்வையிட்டார்.

கடந்த மூன்று வருடகாலமாக கெயர் நிறுவனத்தினால் ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை ஊடாக இந்த வயல் பாடசாலை உறுப்பினர்களின் விவசாய அபிவிருத்தி வேலைகளுக்கென 16லட்சத்து 50ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டிருந்தது.

கால்நடை வளர்ப்பு, நீர் இறைக்கும் இயந்திரம் கொள்வனவு, மாட்டுத் தொழுவம் அமைத்தல், விவசாய உழவு மாடுகள் மற்றும் வண்டி இழுக்கும் மாடுகள் கொள்வனவு ஆகிய பல்வேறு விவசாய முதலீடுகளுக்காக இக்கடனுதவி வழங்கப்பட்டிருந்தது.

இவை நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் கடனைப் பெற்றவர்கள் அதனை முறையாக திருப்பிச் செலுத்தி வந்துள்ளதையும் கெயர் நிறுவனப் பணிப்பாளர் நிக்போன்ஸ் நேரடியாகக் கேட்டறிந்து பாராட்டும் மகிழ்ச்சியும் தெரிவித்தார்.

திட்ட இணைப்பாளர் வி.சுப்பிரமணியம் உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொண்டனர். (203-135)


## கார் விற்பனைக்கு

மிகச் சிறந்த பாவனையில் உள்ள 2 SRI (MINOR - 1000) கார் விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ள: 077 5131111


## பெருமிதத்தோடு வாழ்த்துகின்றோம்



கொக்குவில் மத்தி கிழக்கு (J/126) தரம் - I, கிராம அலுவலராகப் பணியாற்றிய

### திரு.குணபாலசிங்கம் சாந்தமோகன்

அவர்கள் இப்பிரிவில் 17 வருடங்களாகச் சேவையாற்றி உண்மையுடனும் நேர்மையுடனும் பாரபட்சமற்ற முறையில் நடந்து மக்களின் தேவைகளை சேவை மனப்பாங்குடன் அணுகி, பிரிவில் ஏற்படும் பிணக்குகளுக்கு சமாதான முறையில் அவர்களுக்குள் தீர்வினை உருவாக்குவதில் வல்லவராய் இருந்து, முக்கிய நிகழ்வுகள் யாவற்றிலும் கலந்து நல்லுரைகள் ஆற்றி, நல்லதோர் ஆசானாக விளங்கிய இவரது நற்சேவையினைப் பாராட்டுவதுடன் இவர் போட்டிப் பரீட்சை மூலம் பதவியுயர்வு பெற்று தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் அதிசிறப்புத் தர (Supra grade) அலுவலராக நியமனம் பெற்றுள்ளதையிட்டு நாம் அகமகிழ்ந்து, இவர் மேலும் பல உயர்வுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

**கொக்குவில் கிழக்கு வாழ் மக்கள்.** (73374)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அந்திரேஸ்பிள்ளை பாலதாசன்

தோற்றம்
03 ✱ 10 ✱ 1955

மறைவு
22 ✱ 04 ✱ 2007

*"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னில் நம்பிக்கை கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"*


**அப்பா!
இந்த உலகில் ஒன்றுசேர்ந்து
வாழ்ந்த காலம் கொஞ்சமே
எந்த நாளும் உங்கள் அன்பில்
வாழும் எங்கள் நெஞ்சமே.**

*நாவலர் பாடசாலை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.*

திருமதி வி.பாலதாசன்,
பிள்ளைகள். (73376)

# இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

## திருமதி மகாலட்சுமி குலவீரசிங்கம்



**தோற்றம்: 13.11.1944**

**மறைவு: 22.04.2006**

**திதி: 30.04.2008 புதன்கிழமை**

22.04.2006 சனிக்கிழமை அபரபக்க தசமி திதியில் லண்டனில் சிவபதமடைந்த அமரர் மகாலட்சுமி குலவீரசிங்கம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு.

இவர் வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு, இறுதிக்காலம் லண்டனில் வசித்தவரும் செல்லையா குலவீரசிங்கம் அவர்களின் பிரியபத்தினியும் இராசரத்தினம்-மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியுமாவார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*குலவிளக்கு அணைந்த பிரிவால் வாடும்:*
**தாய், கணவர்,**
பிள்ளைகள் - மோகன், குலச்செல்வன், ஸ்ரீகௌரி, ஜெயஸ்ரீ, வாணிஸ்ரீ,
மருமக்கள் - சிவகௌரி, ரேணுகா, மகேஸ்வரன், பகீரதன், சிவரஞ்சன்
பேரப்பிள்ளைகள் - தபினா, கரிஷ்மா, ராகுல், வருண்,
சகோதரர்கள் - பரநிருபசிங்கம், அருந்தவநாதன், உஷாதேவி,
யோகலட்சுமி, ஜெயலட்சுமி.

தகவல்: செ.குலவீரசிங்கம் *(லண்டன்)*,
கு.சரவணநாதன் *(மருமகன் - யாழ்ப்பாணம்)*.

(72939)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனப் பதிவுக்கு விண்ணப்பித்து ஒருவருடமாக காத்துக்கிடக்கும் நிலை!

## வரி செலுத்தமுடியாது திண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.22

மோட்டார் பதிவுத் திணைக்களத்துக்குப் பதிவுப் புத்தகங்களைப் பெற விண்ணப்பித்து ஒருவருடகாலமாகியும் அவற்றைப் பெறமுடியாது காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கிருந்துகொழும்புநாரஹென்பிட்டியில் உள்ள மோட்டார் பதிவுத் திணைக்களத்திற்கு வாகனப் பதிவுக்கு அனுப்பப்பட்ட வாகனங்களின் பதிவுப் புத்தகங்கள் வாகன சொந்தக்காரருக்கு அனுப்பிவைப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்களும் உடமை மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்தவர்களும் உரிய முறையில் படிவங்களைப் பூர்த்திசெய்து இங்குள்ள சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக அனுப்பி வைத்திருந்தனர்.

ஆனால் அனுப்பி ஒரு வருட காலத்திற்கு மேலாகியும் இங்குள்ள உரிமையாளர்களுக்குப் பதிவுப் புத்தகங்கள் கிடைக்கவில்லை.

இது தொடர்பாக விசாரிப்பதற்கு இங்கிருந்து கொழும்பு பயணிப்பது சிரமமும் செலவும் நிறைந்ததாகும். அங்குள்ள உறவினர்கள், நண்பர்கள் ஊடாகக் கேட்கும் போது அங்கிருந்து அனுப்பப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறதாம்.

ஆனால் பலருக்கும் இதுவரை உரிய ஆவணம் கிடைக்கவில்லை.

அத்துடன் இங்கிருந்து முறையாகப் பெயர் குறித்து அனுப்பப்பட்ட படிவங்களில் உள்ள பெயர்கள் மாறுபட்டதாக அதாவது விண்ணப்பதாரரின் பெயர் முன்னதாகவும் தகப்பனாரது பெயர் பின்னதாகவும் சிலவேளை மாறி எழுதப்படுவதால் சிரமங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் வரிப்பணம் கட்டுமிடங்களில் வாகன உரிமையாளர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வரிப்பணம் கட்டுபவரது (உரிமையாளர்) பெயரில் பற்றுச்சீட்டு தரமுடியாதென்றும் அவரது தகப்பனாரது பெயரில்தான் தரலாம் எனவும் உரிய இடங்களில் தெரிவிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே இத்தகைய கால தாமதத்தையும், தவறுகளையும் நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள்நடவடிக்கைஎடுக்கவேண்டுமென யாழ்.மாவட்ட வாகன உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-302)

# வேலணைப் பிரதேசத்தில் அனுமதியின்றி இறைச்சிக்காக கால்நடைகள் வெட்டப்படுகின்றன

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை.

யாழ்ப்பாணம், ஏப்.22

வேலணைப் பகுதியில்அனுமதியற்ற முறையில் இறைச்சிக்காக கால்நடைகள் வெட்டப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தடுக்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அனுமதியற்ற முறையில் வயதான மாடுகள், பசு மாடுகள், சினைப் பசுக்கள், கன்றுகள் என்பன அறுக்கப்படுவதாகவும் அவற்றில் இருந்து எஞ்சும் பாகங்கள் பாவனையற்ற கிணறுகளுக்குள் போடப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் விரைவில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று வேலணைப் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர். (203-95)

# உள்ளூராட்சி மன்ற பொதுநூலகங்களில் தொண்டர் குழுக்கள் அமைக்க அறிவுறுத்து

ஊர்காவற்றுறை,ஏப்.22

உள்ளூராட்சி மன்றப் பொது நூலகங்களில் நூலகத் தொண்டர் குழுக்களை அமைத்துச் செயற்படுத்துமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நூலகப் பாவனையை அதிகரிக்கும் நோக்குடனும் நூலகசேவை வழங்கலில் மக்கள் பங்களிப்பை மேம்படுத்தும் முகமாகவும் இக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும் இக்குழுவிற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஆலோசனையுடன் அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். உறுப்பினர்கள் அப்பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இவர்களுக்கு நூலகரினால் நூலக சேவைபற்றிப் பயிற்சியளிக்கப்படும்.

கணனி, வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல், நூலகச் சுற்றாடலைச் சுத்தம் செய்தல், கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், நூல்கள் சேகரித்தல், நூலகத்திற்காக நிதி சேகரித்தல், வகுப்புகளை ஒழுங்கு செய்து நடத்துதல், பிரதேச புள்ளி விவரங்களை சேகரித்துத் தொகுத்தல் என்பன இத் தொண்டர் குழுக்களின் பணிகளாகும்.

இத் தொண்டர் குழுக்களின் உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களினால் அதன் நிறைவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இத்தொண்டர் குழுவின் காலம் நான்கு மாதங்களாகும். மீண்டும் புதிய தொண்டர் குழு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202-127)

# பலநோக்கு மண்டபத் திறப்பு விழாவும் மாணவர் கௌரவிப்பும்

வடமராட்சி,ஏப்.22

'ராப் - பி நெக் டெப்' நிறுவனத்தால் வியாபாரி மூலையில் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபத் திறப்பு விழாவும், மாணவர் கௌரவிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை வியாபாரிமூலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ஜே.கணேசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் 24 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபத்தையும் அதற்கான பெயர்பலகையையும் திறந்து வைத்தார்.

இந்த மண்டபம் அமைப்பதற்கான காணியை அன்பளிப்புச் செய்த கே.கனகசபாபதியின் பெயர்ப்பலகையை 'ராம் -பி நெக் டெப்' நிறுவனம் யாழ்.மாவட்ட திட்டப் பணிப்பாளர் வீ.வீரபத்திரபிள்ளை திரை நீக்கம் செய்து வைத்தார்.

இக்கிராமத்திலிருந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற, யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் கணிதப் பிரிவில் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் விமலநாதன் ரஜீவன் உட்பட 12 மாணவர்களும், ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் 10 ஏ சிறப்புச் சித்தி பெற்ற மாணவி ஒருவரும் யாழ்.அரச அதிபரால் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

'ராப் -பி நெக் டெப்' திட்டப் பணிப்பாளர் வீ.வீரபத்திரபிள்ளை, பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், இம்மண்டபம் அமைப்பதற்கான பங்காளி நிறுவனமான சேவாலங்கா நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் எஸ்.கேசவன் ஆகியோரும் உரையாற்றினார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (203-236)

# சிறுபோகச் செய்கையில் பாதிப்புற்றோருக்கு உதவுதல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.22

நவாலி விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட பகுதியில் சிறுபோக விவசாயச் செய்கையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற வுள்ளது.

நவாலி மகாவித்தியாலயத்தில் சம்மேளனத் தலைவர் சி. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சண்டிலிப்பாய் கமநலசேவை நிலைய பெரும்பாக அதிகாரி வை.பாலகிருஸ்ணன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் நவாலி சம்மேளனத்தை மூன்று அலகுகளாகப் பிரித்து அபிவிருத்தி செய்வது குறித்தும் ஆராயப்படவுள்ளதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும். (203-95)




# 2007 - ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.22

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் யாழ்.மாவட் டத்திலும் வெளியாகின.

குடாநாட்டில் உள்ள - அந்தந்தப் பாடசாலைகளின் - அதிபர்களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:-

**பிரான்பற்று கலைமகள் வித்தி.**

ம.திவ்யா-3ஏ2பி3சி3எஸ், ப.மயூரி -3ஏ2பி3சி2எஸ், சி.துஷ்யந்தி -2ஏ2பி4சிஎஸ், ந.ஜெயப்பிரியா -2ஏ2பி3சி2எஸ், ம.ராஎினி -2ஏ2பி3சி2எஸ், இ.ராஜி -2ஏபி4சி2எஸ், ம.டயானா - 2ஏ3சி4எஸ்,

ம.சுரேஷ் -ஏ2பி4சி2எஸ், ச.கஜனி -ஏ2பிசி4எஸ், சி.கிரிஜா -ஏ3சி4எஸ், ம.கேதீஸ்வரி -பி2சி4எஸ், வி.அனுஷா -பி2சி3எஸ், வி.பாஸ்கரன் -2பி2சி3எஸ், தி.சங்கீதா -2ஏசி4எஸ், தெ.சத்தியா -ஏபி6எஸ், யோ.டிலக்ஷன் - 3சி4எஸ், இ.ரகு -பி4சி2எஸ்.

**அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி**

சி.சுகன்யா-7ஏ2பிஎஸ், கெ.மேரிநிறேக்கா -6ஏ4பி, கு.யசினியா -6ஏ2பி2சி, செ.மயூரிக்கா - 5ஏ3பி2சி, து.சாருகா -4ஏ4பி2சி, வி.தனுஜா - 4ஏ3பி3சி, ர.நிவேதனா -2ஏ4பி2சிஎஸ், கு.பிறன்சியா -2ஏ3பி4சிஎஸ்,

ஸ்ரீ.ஸ்ரீசஜீபா -2ஏ2பி4சி2எஸ், க.வாண்மதி -2ஏ3பி4சி, சி.சாமந்தி -2ஏபி3சி2எஸ், ம.கார்த்திகா -ஏ2பி4சி3எஸ், ஸ்ரீ.நிலோஜினி -ஏபி5சி3எஸ், பு.சயானா -ஏபி5சி2எஸ், த.சிந்துஜா - ஏபி3சி4எஸ், க.துவாரகா -ஏ4சி4எஸ், நா.விவேகா -ஏ2பி2சி3எஸ்.

**நாவற்குழி அ.த.க.பாடசாலை**

நி.நித்தியா-9ஏஎஸ், சி.தீபிகா -4ஏ2சி4எஸ், து.டிலக்ஸனா -3ஏ4பி3சி, கி.நிஷாஎினி -2ஏ3பிசி4எஸ்.

# காரைநகர் உ.அ.அ.பிரிவில் நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப் போட்டிகளில் முதல் 3 இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

*சிரேஷ்ட பிரிவு:* ராஜ்குமார் ஞானசோதி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.), குகப்பிரியா மயில்வாகனம் (யாழ்ற்றன் கல்லூரி), வி.பாலேந்திரன் (யாழ்ற்றன் கல்லூரி).

*கனிஷ்ட பிரிவு:* தர்சினி கிளாஸ்டர் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.), சிந்துஜா தர்மலிங்கம் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.), ப.கலைச்செல்வி (சுந்தரமூர்த்திநாயனார் வித்தி.).

**கவிதை**

*சிரேஷ்ட பிரிவு:* ச.கோபிகா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.), ந.பிரியதர்சினி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.) சசிந்தினி பரஞ்சோதி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.).

*கனிஷ்ட பிரிவு:* மிறோஜா கோமளேஸ்வரன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.), ஆ.கஜன் (யாழ்ற்றன் கல்லூரி), சாத்விகா சிறிஸ்கந்தராஜா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.).

**சிறுகதை**

*சிரேஷ்ட பிரிவு:* செ.ஹேமாவதி (யாழ்ற்றன் கல்லூரி), வே.தேவகுமாரி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தி.), க.நாகேஸ்வரி (யாழ்ற்றன் கல்லூரி).

*திறந்த பிரிவு:* ஆ.ஞானாம்பிகை (கள பூமி, காரைநகர்). (127)



சிதம்பரம் திருநாவுக்கரசுவின் 'உவமையில்லாக் கலைஞானம்' நூல் அரங்கேற்றவிழா அண்மையில் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் நூலாசிரியருக்கு மலர் மாலை அணிவித்துக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நூலை வெளியிட்டு வைப்பதை மூன்றாவது படத்திலும் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் உரையாற்றுவதை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்:லக்ஷ்மன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் அதிகரித்துவரும் இரைச்சல் ஒலிகளால் மனிதனுக்கு உடல், உள ரீதியில் பாதிப்புகள்

**இன்று புவிதினம். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

இந்த உலகத்தில் வாழும் எந்த ஒரு மனிதனும் தேவையற்ற, எரிச்சலூட்டும் சத்தத்திலிருந்து விடுபட்டு வாழ்ந்துவிடமுடியாது. இவ்வகை இரைச்சலானது மனிதனுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதுடன் பல பாதிப்புக்களையும் ஏற்படுத்துகின்றது. கடந்த முப்பது வருடங்களில் இவ்விரைச்சலானது எல்லா இடங்களிலும் முக்கியமாக நகரப்புறங்களில் விரைவாக அதிகரித்து வருகின்றது. இதனால் உடலியல், உளவியல் ரீதியில் பாதிப்புக்கள் ஏற்படுத்துவது மட்டுமன்றி சூழலில் ஒலி மாசடைதல் எனும் மிகப் பெரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்றைய போர்ச்சூழலில்



பலவகையான சூழல் மாசுபாடுகள், அழிவுகள என்பன ஏற்படுகின்றன. முக்கியமாக இவ் ஒலி மாசடைதலானது மிக அதிகமாக ஏற்படுவதற்கு இப்பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் போர்ச்சூழல் காரணமாக அமைகின்றது. போரின்போது வெடிக்கப்படும் குண்டுகள், பல் குழல்கள், துப்பாக்கி ரவைகள் என்பன வெளியிடும் இரசாயன பொருள்களால் சூழல் மாசடைந்து பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. இதுபோன்று வெடிபொருள்களால் ஏற்படும் ஒலிகளும் சூழலில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அதன்மூலம் ஏற்படும் தாக்கம் மிகப் பாரதூரமாக இருக்கும் என்பது இன்னும் சில தசாப்தங்களில் எம்மால் கண்டுணரக்கூடியதாக இருக்கும். முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது தற்போது பிறக்கும் பல குழந்தைகள் மனவளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பது கண்கூடு.

நிலைமை இவ்வாறிருக்க எமது பிதேச மக்கள் ஒலி மாசடைதல் சம்பந்தமான எவ்வித விழிப்புணர்வுமின்றி மேலும் ஒலி மாசடைதலைத தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாகக் கோயில்களில் விழாக்களின்போது ஒலிபெருக்கி பாவிப்பது, மரண வீட்டு அறிவித்தல்களை ஒலிபெருக்கி மூலம் அறியத்தருவது, திருமண வீடுகள் மற்றும் மங்கல வைபவங்களின்போது பாடல்களை மிகையான சத்தத்தில் ஒலிப்பது போன்ற நடவடிக்கைகளால் ஒலி மிகவும் துரிதமாக மாசடைந்து வருகின்றது. இந்நிலையில் ஒலி மாசடைதல் சம்பந்தமான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது சர்வதேச புவி வாரத்தில் ஒரு முக்கியமான தேவைப்பாடாக அமைகின்றது.

**ஒலி மாசடைதல**

ஒலி மாசடைதல் என்பது ஒருவகை மாசடைதல் சக்தியாகும். வழமைக்கு அதிகமான சததமே இவ்வகை ஒலி மாசடைதலை ஏற்படுத்துகின்றது என்று கருதப்படுகின்றது. இவ் அதிகாத்த சத்தம் மனஉளைச்சல், எரிச்சல் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு அதிக இரைச்சலை ஏற்படுத்தும் காரணிகளாக பின்வருவனவற்றைக்குறிப்பிடலாம்.

- ★ விமானம் தரை இறங்குதல்
- ★ மிகையொலி யுத்தவிமானங்கள்
- ★ போக்குவரத்து ஊடகங்கள்
- ★ இசை ஒலிபரப்பு
- ★ போர்ச்சூழலில் வெடிக்கப்படும் குண்டுகள்
- ★ நீர்த்தடாகங்களில் நீர் நிரப்பும் பம்பிகள்
- ★ இடிமுழக்கம்
- ★ அதிகாலை வேளையில் கட்டட நிர்மாண வேலைகள்
- ★ அதிகாலை வேளையில் தோட்டவேலை
- ★ இரவுவேளைகளில் வியாபார நிலையங் களில் கேட்கும் இரைச்சல்
- ★ வர்த்தக கைத்தொழில் வலயங்கள்
- ★ போர்சூழலில் வாகனத் தொடரணிகள்
- ★ ஆலய மணியோசை
- ★ ஒலிபெருக்கி
- ★ நாய் குரைக்கும் சத்தம்

வெப்ப மாசடைதல், ஒளி மாசடைதல் போன்று ஒலி மாசடைதல் நேரடியாக உடல் உறுப்புக்களில் பாதிப்புகளை ஏற்படுத்தாது எனினும் இதன் மூலம் வெளிப்படும் சக்தியானது இதற்கு சமமான பாதிப்புகளை ஏற்படுத்தவல்லது.

## எங்கள் நாட்டில் அது குறித்த விழிப்புணர்வு வருவது எப்போது...?

**ஒலிமாசடைதலினால் ஏற்படும் பாதிப்புகள்**

கிராமப்புறங்களில் ரயில் போக்கு வரத்து, விமானப் போக்குவரத்து என்ப வற்றின் மூலம் ஏற்படுத்தப்படும் செயற் கையான ஒலியானது மிருகங்களின் வேட்டையாடுதல், உணவு தேடல் போன்ற செயற்பாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. நகர்ப்புறங்களில் வாகனங்களின் இரைச்சல் மற்றும் ஒலிபெருக்கியின் அதிக ஓசை போன்றன மனிதர்கள் விலங்குகள் தூங்கும்போது கஷ்ரங்களை ஏற்படுத்துகின்றன. இதன் மூலம் காது கேட்காமல் போதல், இருதய வியாதிகள், மனநிலை பாதிப்படைதல் போன்ற தீங்குகள் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது.

இவ்வகை இரைச்சல்களினால் காது கேளாமல் போகும் நிலை ஏற்படும். சிலவேளைகளில மணியடித்தல், இரைந்து கதைத்தல் போன்ற காரணங்களால் காது சிறிது காலம் கேட்காமல் போகும் நிலையினை அனைவரும் அனுபவித்திருப்போம். இவ்வகை காது கேளாமல் போகும் நிலையானது சில மணித்தியாலங்களில் சீராகிவிடும். இது பகுதி காது கேளாமல் போதல் (**Temporary Threshold Shift (TTS)**) என்று அழைக்கப்படும். துவக்கு சூட்டுச் சத்தம் கேட்கும்போதும் வாகனங்களில் யன்னல் மூடாமல் பயணம் செய்யும்போதும் இவ்வகை காது கேளாமல் போதல் நிலை ஏற்படலாம். எனினும் ஒரு மனிதன் ஓர் அறையினுள் நின்று சுடும்போதும் தொடர்ச்சியாக 5 நாள்கள் 8 மணித்தியாலங்களுக்கு மேல் வாகனங்களில் பயணம் செய்யும்போதும் நிரந்தரமாக காது கேளாமல் போகும் நிலை ஏற்படும். இவ்வகையான காது கேளாமல் போதலானது எவ்வகையான

## அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இரைச்சலின் தாக்கம் உணரப்படுகிறது

சிகிச்சைக்கும் பயனளிக்காது போகும்.

மேலும் வாகனப் போக்குவரத்து இரைச்சல், மக்களின் கூச்சல் போன்றவற்றின் மூலம் இரத்த அழுத்தம் அதிகரித்தல், இருதயக் கோளாறுகள் மற்றும் மன அழுத்தம் போன்ற பாரிய நோய்கள் ஏற்படுகின்றன. ஜெய்கின்ஸ் (**Jenkins (1979, London Institute of Psychiatry**) என்பவர் மேற்கொண்ட ஆய்வின்போது லண்டனில் உள்ள கீத்தரோ (**Heathrow**) என்ற நகரைச் சுற்றியுள்ள மக்களில் பலர் அப்பகுதி மருத்துவமனைகளில் இருதயக் கோளாறு, மன அழுத்தம் போன்ற நோய்களுக்காக அதிகளவில் சிகிச்சை பெற வருவதை அவதானித்தார். ஆய்வின் முடிவில் அப்பகுதியில் குறித்த நோய்கள் அதிகளவில் ஏற்படக் காரணம் அப்பிரதேசம் லண்டனின் பிரதான விமானத்தளத்தை அண்டிக் காணப்பட்டமையே என்ற உண்மையைக்கண்டறிந்தார்.

புருக்லின் மற்றும் குவீன்ஸ் (**Brooklyn and Queens**) என்பவர்கள் இரைச்சல் நிறைந்த பகுதியில் உள்ள பாடசாலையில் படிக்கும் ஆரம்ப பாடசாலை மாணவர்களின் வாசிப்பு திறன் இரைச்சல் குறைந்த பாடசாலையில் படிக்கும் மாணவர்களுடன் ஒப்பிடும்போது குறைவாகக் காணப்படுகின்றது என அறிந்தனர். அதுபோல் கோன் மற்றும் கொலேகஸ் (**Cohen and Colleagues**) என்பவர்கள் இரைச்சல் நிறைந்த பகுதியில் கீழ் தளங்களில் வசிக்கும் 4 வயதுக்கு குறைந்த குழந்தைகளின் வாசிப்பு திறன் இரைச்சல் குறைந்த பகுதியில் மாடி வீடுகளில வசிக்கும் குழந்தைகளின வாசிப்பு திறனுடன் ஒப்பிடும்போது குறைவாகக் காணப்பட்டமையை ஆய்வின்மூலம் கண்டறிந்தனர்.

இவ்வாறு விமானங்கள், ஜெற் விமானங்கள் போன்றவற்றின் இரைச்சல் மட்டுமன்றி ஏனைய சத்தத்தை அதிகளவில் வெளியிடும் ஏனைய மூலங்கள் மூலமும் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்பது ஆராய்ச்சியின்மூலம் கண்டறியப்பட்ட உண்மையாகும். யாழ்ப்பாணப்பிரதேசத்தில் இரவில் வட்டமிடும் போர் விமானங்கள் மக்களின் தூக்கத்தினைக் கெடுக்கும் அதேவேளை இவ் இரைச்சல் பாதிப்பினால் மாணவர்களிடையே வாசிக்கும் திறன் பாதிப்படையும் என அறியப்பட்டுள்ளது.

**ஒலி மாசடைதலை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒலி மாசடைதலால் ஏற்படும் தாக்கம் எவ்வகையானது என்பது பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அங்கு இரைச்சலை கட்டுப்படுத்தும் செயற்திட்டம் 1970களின் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்நாடுகளில் வாழ்க்கைத் தரத்தைப் பேணும் ஒரு நடவடிக்கையாக இவ ஒலி கட்டுப்பாட்டு நடவடிக்கைகைகளில் அரசாங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் என்பன ஈடுபட்டு வருகின்றன.

அவ்வகையில் ஒலி மாசடைதலை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

- ★ விமானங்கள், வாகனங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இரைச்சல் குறைந்த இயந்திரங்களாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ★ இவ்வகை இயந்திரங்களில் இருந்து வெளிப்படும் அதிர்வுகளைக் குறைத்தல், சத்தம் உட்புகமுடியாத அறைகளை உருவாக்கல், ஒலியினை உள்வாங்கக்கூடிய பொருள்களை அறிமுகப்படுத்தல்
- ★ பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றுக்கு அருகில் அமைதிப்பிரதேசங்களை தோற்றுவித்து அவற்றை பாதுகாத்தல்
- ★ வீட்டில் ஏற்படும் இரைச்சலைக் குறைக்கும் முகமாக வீட்டு முன்புறம் மரங்களை வளர்த்தல், இரைச்சல் அதிகம் ஏற்படாத பகுதியில் வீடுகளை அமைத்தல், படுக்கையறை சமையலறை மலசலகூடம் என்பவற்றை பாதைகளை அண்டி அமைக்காமல் எதிர்ப்புறம் அமைத்தல், யன்னல்கள் கதவுகளுக்கு ஒலி உட்புகாத கண்ணாடிகளைப் பொருத்துதல்
- ★ வீதிகளில் ஏற்படும் இரைச்சலைக் குறைக்கும் முகமாக வீதியோரங்களில் மரங்களை நடுதல்
- ★ ஒலி மாசடைதலை துண்டுதலுக்கு எதிரான சட்ட விதிகளை அமைத்தல்

மேற்கூறிய காரணங்கள் மூலம் ஒலியின் மாசடைதலை ஓரளவு கட்டுப்படுத்தலாம். இவ்வகைச் செயற்பாடுகள் எம் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதன் மூலம் ஏற்படும பாதிப்புகளை குறைப்பதன் மூலம் எம் எதிர்கால சந்ததியினரின் நலனையும் பாதுகாக்க முடியும்.

**சசிகலா பத்மநாதன்**
*நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (காணி)*
*(பொது அபிவிருத்தி)*
*பிரதேச செயலகம், நல்லூர்.*

## பகவதியை நீதிமன்றத்தில் நிறுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு,ஏப்.22

சிறிலங்கா அரச தலைவர் விசாரணைக் குழுவின் செயற்பாடுகளைக் கண்காணித்து வந்த அனைத்துலக வல்லுநர் குழுவின் தலைவரான இந்தியாவின் நீதிபதி பி.என். பகவதியை சிறிலங்காவின் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க கூறியுள்ளதாவது:

சிறிலங்காவின் அரச தலைவர் மற்றும் சட்டமா திணைக்களத்துக்கு மனித உரிமைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான அறிக்கையை இந்தியாவின் தலைமை நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பி.என். பகவதி அளிக்கவில்லை.

அவர் தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டார்.

சிறிலங்காவின் மனித உரிமைகள் தொடர்பான கண்காணிப்பிற்கு மஹிந்த ராஜபக்ஷவினால் நீதிபதி பகவதி அழைக்கப்பட்டார். ஆனால் அவர் தனது பொறுப்புகளை புறந்தள்ளிவிட்டார்.

மனித உரிமைகள் தொடர்பில் அவர் அறிக்கையை கையளிக்கத் தவறிவிட்டார். சிறிலங்காவின் நன்மதிப்பைச் சீர்குலைக்கும் அனைத்துலக சதியின் ஒரு பகுதியே இது. நீதிபதி பி.என்.பகவதி மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டும் - என்றார் அவர். (203)

## வியாபாரிமூலையில் கைத்தொழில் உற்பத்தி நிலையம்

வடமராட்சி,ஏப்.22

வடமராட்சி வியாபாரிமூலையில் கைத்தொழில் உற்பத்தி நிலையத்திற்கான கட்டடம் ஒன்றை கட்டிக்கொடுக்க 'ராம்-பி நெக்டெப்' நிறுவனம் முன் வந்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் இதற்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வியாபாரிமூலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

வியாபாரி மூலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தைத்த ஆடைகளை நீண்ட காலமாக உற்பத்தி செய்து வருவதுடன் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான் கழுத்துப்பட்டிகளையும் தைத்து பாடசாலைகளுக்கு வழங்கி வருகிறது. (203-236)

## ஊர்கவற்றுறை கோட்ட பொது அறிவுப் போட்டி முடிவு

ஊர்காவற்றுறை,ஏப்.22

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் உலக புத்தக தினமான நாளை மறுதினம் பிரதேச சபை பொதுநூலகத்தில் இடம்பெறும் நூல்களின் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வெற்றியீட்டிய மாணவர்களின் விவரம் வருமாறு:

*கீழ்ப்பிரிவு:* ந.சயந்தா (கரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலயம்), ச.ராகவன் (காரைநகர் யாழ்ரன் கல்லூரி), த.வித்தியாகரன் (காரைநகர் யாழ்ரன் கல்லூரி).

*மத்தியபிரிவு:* ம.மேரிநிசானி (ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை), வி.பாலேந்திரன் (காரைநகர் யாழ்ரன் கல்லூரி), ம.மரிசன் தர்மிகா (ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை).

*மேற்பிரிவு:* அ.மேரிகொன்செல்ரா (ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை), இ.சுரேஸ் (காரைநகர் யாழ்ரன் கல்லூரி), பு.சயந்தன் (கரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலயம்)

இப்போட்டிகள் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஏற்கனவே நடத்தப்பட்டதாக ஊர்காற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராசா தெரிவித்தார். (202-127)





உலகப் புத்தக தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை பொதுநூலக மண்டபத்தில் அண்மையில் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டது.

கண்காட்சியில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்காட்சியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: தென்னவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனித உரிமைகளை மேம்படுத்தும் முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண.எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார் நேற்றுமுன் தினம் வன்னி விளாங்குளம் - வவுனிக்குளம் வீதியில் உள்ள அம்பாள் குளம் குழந்தை இயேசு கோவிலடியில் நடத்தப்பட்ட கொடூரக் கிளைமோர்த் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

ஈழத் தமிழர்கள் மத்தியிலே மனித உரிமைகளின் மேம்பாட் டுக்காகக் குரல் எழுப்பிவந்த மற்றொரு குரல், கொடிய கரங்கள் மூலம் நசுக்கி அழிக்கப்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகளை நிலைநிறுத்தவும், மனித உரிமை மீறல்களை சர்வதேச மட்டம்வரை அம்பலப்படுத்தவும் அயராது தீவிரமாகச் செயற்பட்டவர் கருணாரட்ணம் அடிகளார்.

2004 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகக் குழுவுக்குத் தலைமையேற்றுச் சென்று, தமிழ் மக்கள் மீது கொழும்பு அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொடூர மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேசப் பிரதி நிதிகளிடம் எடுத் துரைத்து வந்தவர்.

கத்தோலிக்கத் திருச்சபையின் யாழ். மறைமாவட்டத் தின் கீழ் செயற்பட்டுவந்த கருணாரட்ணம் அடிகளார் தமது தெய்வீகப் பணியை தமது ஒரு கண்ணாகவும், அதன் தொடராக மனித உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் மனிதநேயப் பணியை மற்றைய கண்ணாகவும் கருதிக் கருமமாற்றி வந்த பண்பாளர்.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாட்டாளராக விளங்கிய மாமனிதர் அரிய நாயகம் சந்திரநேரு 2005 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் ஒட்டுக் குழுவினரின் தாக்குதலில் உயிரிழந்தார்.

அதேபோல, அந்த அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்க ளான பதினொருவரில் மற்றொருவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பின ரான மாமனிதர் ஜோஸப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் வழிபாட்டின்போது மட்டக்களப்பில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - உயர் பாதுகாப்பு வலயப் பகு திக்குள் வைத்து - ஒட்டுக் குழுவினரால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

அந்த வரிசையில் மற்றொரு ஸ்தாபக உறுப்பினரான அருட் திரு கருணாரட்ணம் அடிகளார் மாங்குளத்தில் வழிபாட்டை முடித் துக்கொண்டு வன்னி விளாங்குளத்தில் உள்ள தனது பங்கு கோவிலுக்குத் திரும்பிக்கொண்டிருக்கை யில் இலக்கு வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

சூத்திரதாரிகள் பகிரங்கமாக - திடமாக - உறுதியாக - அடை யாளம் காணப்பட்டு அம்பலப்படுத்தப்படாமல் போகும் இலங்கையின் அண்மைக்காலக் கொடூரக் கொலை களின் வரிசையில் இந்தக் கோரமும் ஒரு வகையில் சேர்க்கப் படக்கூடும்.

ஆனால், இலங்கையில் அதிகார வர்க்கம் தொங்க விட்டி ருக்கும் மர்மத் திரைகளுக்குப் பின்னால் இவ்வாறு அரங்கே றும் மோசமான படுகொலைகள், சட்டத்துக்குப் புறம்பான மரண தண்டனைகள், ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய் தல், அச்சுறுத்திக் கப்பம் அறவிடல் போன்ற கொடூரங்களின் நதி மூலத்தைத் தனக்கேயுரிய மோப்ப சக்தி மூலம் சர்வதேசம் உணர்ந்து அறிந்து அம்பலப்படுத்தி வருவதையும், இத்தகைய கொடூரங்களின் சூத்திரதாரிகளுக்கு எதிராக சர்வதேசக் கண் டனக்குரல் வலுவாக எழுந்து வருவதையும் இப்போது கண்டு வருகின்றோம்.

அதிகார வர்க்கத்தின் அரூபக் கரங்களை அடையாளம் கண் டுள்ள சர்வதேச உலகுக்கு ஈழத் தமிழர் தாயகத்தின் மனித உரிமைச் செயற்பாட்டாளரான வண. கருணாரட்ணம் அடிக ளாரின் படுகொலைப் பின்புலத்தில் உள்ள இரத்தக்கறை படிந்த கரங்களை அடையாளம் காண்பது அவ்வளவு ஒன்றும் பெரிய விடயமல்ல.

ஆனால், இதில் சோகம் என்னவென்றால் இத்தகைய அதி கார வர்க்கங்களின் அரூபக் கரங்களை - அராஜகங்களின் சூத்தி ரதாரிகளை - சர்வதேசம் மோப்பம் பிடித்துக் கண்டறிவதற்கு வசதியாக சர்வதேசத்தின் புலன் உறுப்பாகச் செயற்பட்ட வண. கருணாரட்ணம் அடிகளாரே இன்று அந்த அரூபக் கரங் களின் நடவடிக்கைக்கு இரையாகியிருக்கின்றார் என்பதுதான்.

அண்மைக்காலத்தில் இலங்கை இனப்பிரச்சினையை ஒட் டிய யுத்தத்தில் முக்கிய விவாதப் பொருளாக - வாதக் கருவாக - மாறியிருக் கின்ற விடயம் மடுமாதா தேவாலய விவகாரமாகும்.

மனித உரிமை ஆர்வலராகவும், மடுதேவாலயத்தின் பரிபால கர்களாகிய கத்தோலிக்கத் திருச்சபையின் மறைப் பணிகளில் தீவிரப் பங்காற்றுபவருமாக வண. கருணாரட்ணம் அடிகளார் இருந்த மையினால் இது விடயத்தில் அவரது கருத்து நிலைப்பாடு மிக முக்கிய விடயமாகக் கொள்ளப்பட்டது.

மடுத் தேவாலயத்தின் விவகாரங்களை ஒட்டி உண்மை நிலை மையை வெளிப்படையாகவும், தெளிவாகவும், துணிச் சலாகவும் வெளியிட்டு இவ்விடயத்தில் கொழும்பு அரசின் முகமூடியைப் பகிரங்கமாகக் கிழிக்கச் செய்து உண்மையை அம்பலப்படுத்தியவர் கருணாரட்ணம் அடிகளார். உண்மை யைப் பகிரங்கமாக வெளிப் படுத்திய குற்றத்துக்காகத் தமது உயிரையே இழக்க வேண்டியவரானார் அவர்.

மடுமாதாவின் திருச்சொரூபம் ஆலயத்திலிருந்து அகற்றப்படும் சூழ்நிலை - அவலம் - உருவானமைக்கு இலங்கை அரசும், அத்தகைய நிலையை இலங்கை அரசு ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்தத் தவறியமைக்கு சர்வதேசமுமே பொறுப்பேற்க வேண்டும் எனப் பகிரங்கமாக முழங்கியவர் கருணாரட்ணம் அடிகளார்.

கத்தோலிக்க மறைப் பணியாளராகவும், அதேநேரம் மனித உரிமை களுக்காகக் குரல் எழுப்பும் முக்கிய ஆர்வலராகவும் செயற்படும் முக்கியஸ்தர் ஒருவர் இவ்வாறு வெளிப்படையாகக் குற்றம் சுமத் துகின்றமை சம்பந்தப்பட்டோருக்கு எத்தகைய நெருக்குதலை உருவாக் கியிருக்கும் என்பது உணரத்தக்கது.

கருணாரட்ணம் அடிகளார் கத்தோலிக்க திருச்சபையின் மதப் பணி யாளர் என்றாலும் கூட, ஈழத் தமிழ் மண்ணில் அவரின் சேவை மதம் கடந்து, பிரதேசம் தாண்டி சமரச நோக்குக் கொண் டதாக அமைந்தது. மண்ணின் விடுதலைக்கும், சமரச வாழ்வுக்குமாகப் பெரும் பங்காற்றிய மனித நேயப் போராளி அவர்.

சொல்லிலும் செயலிலும் வேறுபாடின்றி, தளர்வின்றி செயற்பட்ட ஒரு சமுதாயச் சிற்பி கருணாரட்ணம் அடிகளார்.

தமது இறப்புக்கு இரு வாரங்களுக்கு முன்னர் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் மூலம் தாம் விடுத்த பகிரங்க அறிக்கையில், ஈழத் தமிழர் தாயகம் மீது கொழும்பு நிர்வாகம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் கொடூர மனித உரிமை மீறல்கள் குறித்துக் காட்டமாகக் கண்டித்திருந்தார்.

இந்த மனிதநேயப் பணியாளனின் அகால மறைவு விடயத்தில் ஏதேனும் நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என சர்வதேச சமூகம் உட்பட எத்தரப்பினராவது கருதுவார்களேயானால், அவரது அந்தக் கடைசி அறிக்கையில் - உயிலில் - அவர் குறிப்பிட்டுள்ள அம்சங்களைக் கவனத்தில் எடுத்து, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த விடயங்களுக்கு நியாயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வார்களேயானால் அடிகளாரின் படுகொலை விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட்டதாகவே அது அமையும்.

மனித உரிமைகளை மேம்படுத்தும் சர்வதேச முயற்சிகளுக்கு அடிகளாரின் மறைவு பெரும் பின்னடைவு. இத்தகைய கொடூரங்கள் இனியும் தொடர சர்வதேசம் பார்த்திருக்கப் போகின்றதா? ஈழத் தமிழ் மக்கள் ஏக்கத்துடன் எழுப்பும் கேள்வி இது.

## இந்தியாவில் அண்மைக்காலமாகப் பெருகிவரும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான உணர்வலைகள்

கொழும்பு,ஏப்.22

புலிகள் இயக்கத்தைப் பயங்கர வாத முத்திரைகுத்தி அந்த இயக்கத் தின் செயற்பாடுகளை இந்தியாவில் தடைசெய்து ஈழத் தமிழர்களுக்கான ஆதரவுத் தளத்தைக் கடந்த காலங் களில் நிர்மூலம் செய்திருந்த மத்திய அரசு இதற்குக் காரணம் இந்திய முன் னாள் பிரதமர் ராஜீவ்காந்தி மீதான படு கொலை என உலகத் தமிழர்களுக்குக்

**இது செய்திக் கண்ணோட்டம்**

கிளிப்பிள்ளைப் பாடம் ஒப்புவித்தது.

ஈழத்திற்கான உரிமைப்போர் போரி யல் வரலாற்றில் சுமார் 30 வருடங்களைக் காவு கொண்டுள்ள நிலையில் கிட்டத் தட்ட 17 வருடங்களை இந்தியாவின் புலித் தடை பொசுக்கிவிட்டது என்று குறிப்பிடுவது இந்நிலையில் சாலப் பொருந்தும்.

இந்தியாவின் கைவிரிப்புக்கு மத்தி யிலே அதன் ஒத்துழைப்பின்றியே ஈழத் தமிழர்களின் உரிமைப் பயணம் தொட ரும் நிலையில் சமீப காலமாக இந் தியாவில் அதன் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான உணர்வலைகள் எல்லை கடந்து மடை திறந்த வெள்ளம் போல பெருகிவருவதை இந்திய அரசியல் சமுத்திரத்தில் பார்க்க முடிகிறது.

பூகோள வரைபில் இந்தியாவின் காலடியில் கிடக்கும் இலங்காபுரியில் அதன் உள்நாட்டுக்குள் நாளாந்தம் நடந்து கொண்டிருக்கும் வன்முறையின் அதிர்வுகள் இந்தியாவின் உச்சந்தலை யில் உதைப்பதுபோல அது இப்போது உணரத் தலைப்பட்டுள்ளது போலும்.

இதற்கு உதாரணமாக மாறிவரும் இந்திய அரசியலில் தற்போது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இடம்பெற்று வரும் முக்கிய நிகழ்வுகளை இவ் ஆய் வில் பதிவு செய்யலாம்.

பிரபாகரன் எனப் பெயரிட்ட சிங்களத் திரைப்படம் மீதான உடனடி இடைக் காலத்தடை டி.ராஜேந்தரின் அரசியல் கட்சித் தலைமைத்துவப் பதவி துறப்பு ஒகேனக்கல் குடிநீர்த் திட்ட விவகாரம் தொடர்பில் தமிழக நடிகர் சங்கம் மேற் கொண்ட உண்ணாவிரத நிகழ்வில் நடி கர்களான சத்தியராஜ், ரஜினிகாந், சரத் குமார் ஆகியோர் ஈழத்தமிழர்களுக்காக ஆற்றிய ஆவேச உரை, நளினி, பிரி யங்கா சந்திப்பு, ம.தி.மு.க. செயலர் வைக்கோவின் நோர்வே உரை, அத னைத் தொடர்ந்து வந்த இந்திய ஆன் மீகத் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கரின் இலங்கை சமாதான முன்னெடுப்பு கள் மீதான அக்கறை. அதன் பின்ன ரான வைகோ, மன்மோகன் சிங் சந் திப்பு, தமிழக முதல்வர் கருணாநிதி (Times of India) என்ற நாளேட்டுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி, திரா விடர் கழகத் தலைவர் கீ.வீரமணி யின் ஈழத்தமிழர்களுக்காக ஒன்றுபடு வோம் என்ற அறைகூவல், பட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் இராமதாஸ், மன்மோகன் சந்திப்பு ஆகியவை இந்திய மத்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்ட தயா ராகின்றது என்பதையே தெளிவுபடுத் தும். இதேவேளை இந்தியாவின் ஈழத் தமிழர் மீதான எண்ணக்கருக் களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு உள்வாங்கி எதிர்காலத்தில் அரசியல் தீர்வு விடயத்தில் காய்களை நகர்த்தப் போகிறார்கள் என்பதிலேயே ஈழத் தமிழர்களின் உரிமைக்கான வெற்றி தங்கியுள்ளது.

### விடுதலைப் புலிகளின் காய் நகர்த்தல் எவ்வாறு அமையப் போகின்றது?

*

## பிளவுக்குக் காரணமானவர்களை வெளியேற்றினால் தலைமைத்துவத்துடன் எந்நேரமும் பேச்சுக்குத் தயார்

### ஜே.வி.பி. அதிருப்திக்குழுவின் தலைவர் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22

ஐக்கிய தேசியக் கட்சியின் தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்காக கட் சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு காரணமா னவர்களை கட்சியிலி ருந்து வெளி யேற்றினால் கட்சித் தலை மையு டன் எந் நேரமும் பேச்சு வார்த் தைக்குத் தயார் என்று மக்கள் விடு தலை முன் னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீர வன்ஸ தெரிவித்தார்.



மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகா நாயக்கர்களை நேற்று முன்தினம் சந் தித்ததன் பின்னர் அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரி வித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

ஐ.தே. கட்சியின் தேவையை நிறை வேற்றும் பொருட்டு மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த இரண்டொரு வரினால் கட்சிக்குள் பிளவை ஏற்படுத் தும் நிலையை உருவாக்கியுள்ளது. அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றி அதற்குப் பதிலாக தன்னோடு இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட் சிக்குள் பங்களிப்புச் செய்வதற்கு ம.வி. முக்குள் இடமிருக்குமாயின் கட்சித் தலைமைத்துவத்துடன் நிலவும் பிரச்சி னைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத் துவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் தயார்.

கட்சித் தலைமை உட்பட அக் குழு வினர் இதுவரை பிரச்சினையை பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள் வதற்கான அனைத்து வழிகளையும் தடை செய்யும் வகையிலேயே செயற்படுகின்ற னர். நமது குழுவினர் ஒழுக்கக் கட்டுப்பாட் டோடு செயலாற்றும்போது மற்றக் குழு வினர் பல்வேறு குறைபாடுகளைச் சுமத்தி வன்முறைகளைக் கூட தூண்டி விட்டு செயற்பட்டு வருவதோடு கட்சிக்குள் நிலவும் தமது குழுவினருக்குத் தெரிந்த தகவல்களைக் கூட தங்களுக்கே வெளிப் படுத்தாமல் இருக்கின்றனர்-என்றார்.

கட்சிக்குள் நிலவும் நெருக்கடியை தீர்த்துக்கொள்வதற்கு சுமுகமான அர சியல் பேச்சுவார்த்தைக்கு தலைமைத் துவம் தயாரென்றால் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண முடியுமென்றும் இவ்வாலோசனை களை நிபந்தனைகளோடு முன் வைக்க வில்லை என்றும் கட்சியின் எதிர்கால அபிவிருத்திக்காகவே இவ்வாலோ சனைகளை முன் வைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசுடன் இணைந்து அமைச்சர் பதவியைப் பெறுவதனால் ஏற்கனவே அதற்கான எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்தன. எமது குழுவினர் மேற் கொண்ட முடிவுகள் நேர்மையானதும் உண்மை யானதும் சக்திமிக்க துமாகும். தீய நோக் கில் சிலர் பல்வேறு சதிகளை மேற்கொண் டுள்ளனர். எதிரிகளின் தீய சக்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எமது குழுவினர் ஒரு போதும் செயற்பட மாட்டார்கள் - என்று சொன்னார். (50)

### இலக்கியச் செயலமர்வு

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை இலக்கியச் செயலமர்வு ஒன்றை நடத்தவுள்ளது.

'யாழ்ப்பாணத்தின் ஜனரஞ்சக நாடக அரங்கு' என்னும் தலைப்பில் செயல்முறை விளக்கங்களுடன் நாளை பிற்பகல் 2 மணிக்குப் பிரதேச சபை யின் கலாசார மண்டபத்தில் செயல மர்வு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகக் கல்வியி யல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலா நிதி த.கலாமணி தலைமையிலான குழு வினர் செயலமர்வை நடத்துவர். (202)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 11 | 23.04.2008 |
| | புதன்கிழமை |
| திதி: திருதியை | மு.இ. 09.33வரை |
| நட்சத்திரம் : | அனுஷம் |
| | மு.இ. 11.01 வரை |
| சுபநேரம் : | 04.30 - 06.00 |
| ராகுகாலம் : | 12.00 - 01.30 |

### ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்ற வடமராட்சியில் மாணவர் பத்துப் பேருக்கு உயர்தரம் கற்க சென்.ஜோன்ஸ் கல்லூரி அழைப்பு

கரவெட்டி,ஏப்.22

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெற்ற வடம ராட்சி மாணவர்கள் 10 பேருக்குச் சென். ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தரம் கற் பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியான ஜி.சீ.ஈ சாதாரணதரப் பெறுபேறுகளில் வதிரி தமிழ்மன்றப் பிரிவில் 26 மாணவர்கள் திறமைச் சித்திபெற்றிருந்தனர்.

இவர்களுக்கான பாராட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்விக்கழக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் எஸ்.டானியல், 10 மாணவர்களுக்கு ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவிற்குத் தமது பாடசாலையில் அனுமதி வழங்கு வதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ்மன்றத் தலைவர் சி.க.இராசேந் திரன் தலைமையில் நடைபெற்ற பாராட்டு நிகழ்வில் கல்விச் சமூகத்தினர் பெருமளவானோர் கலந்து கொண்ட [illegible]. இதில் கலந்துகொண்டு உரையாற் றிய பின்னரே மாணவர் ஏற்பு அழைப்பை அவர் வெளியிட்டுள்ளார். (203-70)

## முறைப்பாடு செய்யப் போனவர்களை அவதூறு செய்து துரத்தியடித்துள்ளார்களாம்

### மனித உரிமை ஆணையம் குறித்து ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.22

ஆள்கடத்தல் பற்றி மனித உரிமை கள் ஆணையத்திடம் முறைப்பாடு செய்யப் போனவர்கள் அவதூறு செய் யப்பட்டு துரத்தியடிக்கப்பட்டுள்ளார் கள் என்று ஐக்கிய தேசியக்கட்சி பிர முகர் ஒருவர் அறிக்கை விடுத்துள் ளார். இணையத்தளம் ஒன்றில் இது பற் றிய செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் கடந்த இரண்டு மாதங்களில் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு உரிமை மீறல்கள் தொடர் பாக 200 முறைப்பாடுகள் கிடைத் துள்ளன. இவைகளில் 40 ஆள்கடத் தல் தொடர்பானவை என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. ஐ.தே.க. அறிக்கையில் முன்னதாக இவ்வாறு முறைப்பாடு செய் யச் சென்றவர்கள் அவதூறாகப் பேசித் துரத்தப்பட்டார்கள் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச்சாட்டு ஒன்று முக்கிய எதிர்கட்சியொன்றிடம் இருந்து வந்துள்ளமையால் இது பாரதூரமாகக் கணிக்கப்பட்டு தீவிர விசாரணைக் குட்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கான வாக்கெடுப்பாகவே தேர்தலை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கருதுகின்றது

## அம்பாறை முதன்மை வேட்பாளர் ஹசன் அலி சொல்கிறார்

அம்பாறை,ஏப்.22

அடுத்தமாதம் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலை வடக்கு- கிழக்கு இணைப்பு சம்பந்தமான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கருதுவதாக அதன் செயலாளர் நாயகமும் அம்பாறை மாவட்ட முதன்மை வேட்பாளருமான எம்.ரி.ஹசன் அலி தெரிவித்தார்.

நிந்தவூர் அரசடித் தோட்டத்தில் இடம் பெற்ற மகளிர் சமாஜக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

''வடக்கு - கிழக்கு மண்ணில் நெடுங் காலமாக வாழ்ந்துவரும் சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது தாயகத்தில் நியாயமான சமூக அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு அரசியல் தீர்வை எதிர்பார்த்திருந்த வேளையில், திடீரென ஓர் அதிரடி நடவடிக்கையாகப் பெரும் தேசிய கடும் போக்குவாதிகள் வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்துவிட்டு இம்மண்ணில் வாழ்கின்ற இரு சிறுபான்மைச் சமூகத்தினரையும் முதலமைச்சரைப் பெற்றுக்கொள்வதற்காக ஒன்றுடன் மற்றொன்றை மோதவிடும் கைங்கரியத்தைச் செய்து வருகின்றார்கள்.

ஒரு முஸ்லிம் முதலமைச்சரைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று நாம் பெரும்பான்மை சமூகத்தினரிடம் கையேந்த வேண்டிய சூழலை இன்றைய கிழக்கு மாகாணம் ஏற்படுத்தி உள்ளது. குரங்கு அப்பம் பங்கிட்ட கதைபோன்று தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இந்த முதலமைச்சர் பதவியை பெரும்பான்மை சமூகத்தினர் இனிமேல் பங்கிடுவார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தற்போது அரசினால் பிரிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணம் ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணமுமல்ல. அதில் ஒரு முஸ்லிம் முதலமைச்சர் வரவேண்டும் என தலைவர் அஷ்ரஃப் ஒருபோதும் கனவு காணவுமில்லை. தனியான ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாணம் அமைக்கப்பட்டு அதன் மூலம் எப்போதும் எந்தக் கட்சியில் இருந்தாலும் ஒரு முஸ்லிம் முதலமைச்சர் வென்று வரவேண்டும் என்றே அவர் விரும்பினார்.

எனவே, முஸ்லிம் மாகாண சபையொன்றினை முஸ்லிம்களுக்குத் தராமல் வெறுமனே இந்தக் கிழக்கைப் பிரித்ததை முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொள்கின்றதா? இல்லையா? என்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே இத்தேர்தலை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்கொள்கின்றது. அதுமட்டுமல்ல கிழக்கைப் பிரித்துவிட்டு முஸ்லிம்களின் இருப்பைப் பிரதிபலிக்காத வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வமான புதிய மாகாணக் கொடியை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்கின்றார்களா? இல்லையா? என்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவும் இத்தேர்தலை நாம் எதிர்கொள்கிறோம்.

பொத்துவிலிலிருந்து புல்மோட்டை வரையுள்ள முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகள் காடு வளர்ப்பு, புனித பூமி விஸ்தரிப்பு, கரும்புச் செய்கை, கல்லோயாத் திட்டம், மீள் குடியேற்றம் என்ற போர்வைகளில் ஆங்காங்கே அபகரிக்கப்பட்டு வருவதை முஸ்லிம்கள் அங்கீகரிக்கின்றார்களா? இல்லையா? என்பதற்கான பதிலையும் இத்தேர்தலில் நாங்கள் காட்ட வேண்டியிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் சமூகங்கள் தங்களது தாய் மொழிப் பிரதேசத்தில் எவ்வித தடங்கலுமின்றி தமிழ் மொழியில் நிர்வாகம் செய்வதற்கான ஒரு கரையோர மாவட்டம் வேண்டுமா? இல்லையா? என்பதற்கான பதிலை அளிப்பதற்கான ஒரு தேர்தலாகவும் இதனை அவர்கள் எதிர்கொள்கின்றார்கள்.

எனவே தான் முக்கியத்துவம் வாய்ந்த சர்வஜன வாக்கெடுப்புக்கு ஒப்பான இத் தேர்தலில் முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானத்துடன் வாக்களிக்க வேண்டியுள்ளது - என்றார். (50)

# மட்டு. மாகாண தேர்தலுக்குமுன் அமைச்சுச் செயலர் பதவிகளில் மாற்றம் வரும்

கொழும்பு,ஏப்.22

அரசின் முக்கிய சில அமைச்சுகளின் செயலாளர்கள் விரைவில் அவர்களது பதவிகளில் இந்தும் இடமாற்றம் செய்யப் படவுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட இம்மாற்றங்கள் எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் நடைமுறைபடுத்தப்படவுள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

பத்து வரையான அமைச்சுக்களது செயலாளர்கள் இவ்விதம் வெவ்வேறு அமைச்சுகளுக்கு இடமாற்றப்படவுள்ளதாகவும் அறியப்படுகிறது. (ப-3)

# சின்ன வெங்காயம் விலை உயர்வு

திருநெல்வேலி,ஏப்.22

சின்ன வெங்காயத்தின் விலை உயர்வடைந்துள்ளது.

இதுவரை நாள்களாக கிலோ 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த இதன் விலை தற்போது 50 தொடக்கம் 60 ரூபாவாக வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது.

இதே நேரத்தில் தேசிக்காய் கிலோ 240 ரூபா தொடக்கம் 260 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. (203-51)

**சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்**
**கோப் - சிற்றி (CO-Op-City)**
***திறப்பு விழா***
நாளை (23.04.2008) புதன் கிழமை
நண்பகல் 11.50 - 12.15 வரை
இடம் : சங்கத்தின் தலைமை அலுவலகம்
பிரதான வீதி, சாவகச்சேரி.
*முதன்மை விருந்தினர்கள்*
திரு.பொ.சிவலிங்கம்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - யாழ்ப்பாணம்)
திரு.செ.ஸ்ரீனிவாசன் (பிரதேச செயலர் - தென்மராட்சி)
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
**பணிப்பாளர், பணியாளர்கள்.**

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பாட்டியானார்

கொழும்பு,ஏப்.22

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி அண்மையில் பாட்டியானார்.


கடந்த ஆண்டில் பிரித்தானிய பிரஜையான வோகரை திருமணம் செய்து கொண்ட சந்திரிகாவின் ஒரே மகளான யசோதா அண்மையில் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்ததன் மூலம் சந்திரிகா பேரப்பிள்ளையைக் கண்டு பாட்டியாகி விட்டார்.

சந்திரிகாவின் பேரக் குழந்தைக்கு ரவி மைக்கேல் விஜயவோகர் எனப் பெயரிடப் பட்டுள்ளது. (ப-3)

**வாழ்த்துகின்றோம்**
யாழ். விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களான
**திரு. அல்போன்ஸ் ஸ்ரனிஸ் அற்புதராஜ்**
அவர்கள் சட்டக் கல்லூரியில்
சட்டத்தரணி பட்டம் பெற்றுள்ளார். அத்துடன்
**திரு. நாகராஜா இதயராஜன்**
அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி முதுகலைமாணி பட்டம் பெற்றுள்ளார். இவர்கள் இருவ்ரையும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்,
*129, 2ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*
[சி/552497]

**கண்ணீர் அஞ்சலி**
எமது இசையாசிரியை,
செல்வி பகீரதி சுப்பிரமணியக் குருக்கள்
அவர்களின் அன்புத் தந்தையார்
பிரம்மஸ்ரீ.இரத்தினசபாபதிக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்
அவர்களின் மறைவால் துயருறும் அவர்களது குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா அமைதி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.
**யாழ்.வலய இசையாசிரியர் கழகம்.** (73384)

**31 ஆம் நாள் நினைஞ்சலி**
அமரர் அந்தோனிப்பிள்ளை செல்வராசா
22.04.2008



மனிதருள் மாணிக்கமே
மனைவிக்கோர் உத்தம புருஷனாய்
பிள்ளைகளுக்கோர் தந்தையாய் ஆசானாய்
அன்பிற் சோதரராய் ஆருயிர் நன்பனாய்
ஆன மட்டும் வாழ்ந்தீரே
உன் நினைவே எம் மனதில் அலை பாயுதே
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் நினைவால் துயருறும்
(நண்பன்)
சுன்னாகம், ஏழலை. (73388) க. சற்குருநாதன் குடும்பம்.

**கண்ணீர் அஞ்சலி**
*வேலாயுதம்பிள்ளை கிருஸ்ணகாந்தன்*
*(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்)*



அவர்கள் 20.04.2008 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.
நிறைவேற்றுப் பொறியியலாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும். (73379)

# பர்மா அரிசி வந்துசேர தாமதமாகுமாம்

கொழும்பு,ஏப்.22

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் அரிசி விலையைக் கட்டுப்படுத்த பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அரசு தெரிவித்து வரும் அதே சமயம் அவ்விதம் இறக்குமதி செய்யப்படுமானால் அது இங்கு வந்துசேர மேலும் ஒரு மாதம்வரை தாமதமேற்படக் கூடுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு விடுமுறைக்காகத் தாம் இம்முறை பர்மாவுக்குச் சென்றிருந்ததாகவும், பர்மாவில் ஏப்ரல் 21 ஆம் திகதியே புத்தாண்டு கொண்டாடப்படுவதால், இலங்கைக்கான அரிசி விநியோகம் தாமதமடையக் கூடுமெனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயகாவின் மகனது திருமண வைபவத்தில் சந்தித்துக்கொண்ட வேளையிலேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் மேற்கண்டவாறு தெரிவித்ததாகவும், இவர்களுடன் அமைச்சர்களான கருஜயசூர்யா, தினேஸ் குணவர்த்தனா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்கா ஆகியோரும் ஒரே மேசையைச் சுற்றியமர்ந்து சிநேகபூர்வமாக உரையாடியதாகவும் தெரிய வந்துள்ளது. (ப-3)

# மத்தியஸ்தர் கருத்தரங்கு

வலி.வடக்கு,ஏப்.22

யாழ்ப்பாணம் துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு ஒன்று யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணம் துடுப்பாட்டச் சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி மத்தியஸ்தர் சங்க செயலாளர் ந.சிவராசா கேட்டுள்ளார். (203-86)

**மரண அறிவித்தல்**
*திருமதி ஸ்ரீமதி நகுலமீரா*

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த ஸ்ரீமதி நகுலமீரா நேற்று 21.04.2008 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நவரத்தினம் (C.T.B. மணியம்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் பொ.சிதம்பரநாதனின் அன்பு மனைவியும் நாகப்பிரபா (ஆஸ்திரேலியா), சித்திராரூபி(லண்டன்), ஷாமினி ஆகியோரின் அன்புத் தாயும் கிரிந்தன் (ஆஸ்திரேலியா), சுகிர்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆதித்தனின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*245/1, Initium Road,*
*Dehiwela.*
*T.P.2732481.*
தகவல்:
கே.ரீ.சிவகுருநாதன்

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்**
மலர்வு 06 12 1950
உதிர்வு 25 03 2008



**அமரர் மகேந்திரன் தயாபரன்**
(கிராம அலுவலர், J/118 கோண்டாவில் மத்தி கிழக்கு, நல்லூர் பிரதேச செயலகம்)

எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி கடந்த 25.03.2008 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வமும் பாசமிகு கணவரும் பாசமிகு தந்தையுமான அமரர் மகேந்திரன் தயாபரன் அவர்களின் மறைவின் போது ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இறுதிக் கிரியைகளின்போது சமுகமளித்த அன்பு உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (22.04.2008) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் (24.04.2008) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்*
'லோக வாசா',
கோப்பாய் மத்தி.
0602218208.
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் முரளி இல்லை

## கடந்த பத்து வருடங்களில் இதுவே முதல் தடவை



டுபாய், ஏப்.22

ஒருநாள் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர் தரவரிசையில் முதல் பத்து இடங்களிலிருந்து முரளிதரன் பின்தள்ளப்பட்டுள்ளார். கடந்த பத்து வருடங்களில் முதல் தடவையாக முரளிதரன் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடிக்கத் தவறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம் பெற்றிராத முரளிதரன், நேற்று சர்வதேச கிரிக்கெட் சபையால் கடைசியாக வெளியிடப்பட்ட தரவரிசையில் 658 புள்ளிகளுடன் 11 ஆவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளார்.

1997ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதல் பத்து இடங்களுக்குள் முரளிதரன் இடம்பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது அந்தப் பெருமையை சுமார் பதினொரு வருடங்களின் பின்னர் முதல் தடவையாக முரளி இழந்துள்ளார். மீண்டும் அவர் பத்து இடங்களுக்குள் இடம்பெற வேண்டுமாயின் சுமார் இரண்டு மாதங்கள் வரை காத்திருக்கவேண்டும். எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகும் ஆசியக் கிண்ணத் தொடரில் பிரகாசிக்கும் பட்சத்தில் முரளிதரன் தரவரிசையில் முன்னேற்றம் காணலாம்.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாகப் பந்துவீசியிருந்த பாகிஸ்தானின் சயீட் அப்ரிடி, முரளிதரனைப் பின்னுக்குத் தள்ளி 10ஆவது இடத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் முதல் தடவையாக பத்து இடங்களுக்குள் அப்ரிடி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பங்களாதேஷுக்கு எதிரான தொடரில் அவர் 12 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

நியூஸிலாந்தின் டானியல் வெட்டோறி தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் கிரேம் சிமித் முதலிடம் பெற்றுள்ளார்.

அணிகளுக்கான தரவரிசையில் 127 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா அணி தொடர்ந்தும் முதலிடத்தில் இருந்து வருகின்றது. அதே புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா அணி இரண்டாம் இடத்தில் உள்ளது. தசமப்புள்ளிகள் அடிப்படையில் தென்னாபிரிக்கா அணி முதல் இடத்திற்கான தகுதியைப் பெற்றுவருகின்றது.

துடுப்பாட்ட வீரர்களில் முதல் பத்து இடங்களில் உள்ளோர்:-

கிரேம் சிமித், சச்சின் டெண்டுல்கர், ரிக்கி பொண்டிங், மொகமட் யூசுப், சந்தர்போல், மத்தியூ ஹைடன், மைக்கல் ஹசே, கெவின் பீற்றர்ஸன், டீ வில்லியர்ஸ், மகேந்திரசிங் டோனி.

பந்துவீச்சாளர்களில் முதல் பத்து இடங்களில் உள்ளோர்:-

டானியல் வெட்டோறி, நதன் பிரக்கன், ஷேன் பொண்ட், சமிந்த வாஸ், கைல் மில்ஸ், அன்ட்ரூ நெல், டரன் பவல், ஜெரோமி ரெய்லர், பிரட் லீ, சயீட் அப்ரிடி.

அணிகளுக்கான தரவரிசை:-

தென்னாபிரிக்கா (127), ஆஸ்திரேலியா (127), நியூஸிலாந்து (113), இந்தியா (113), பாகிஸ்தான் (110), இலங்கை (105), இங்கிலாந்து (105), மேற்கிந்தியத் தீவுகள் (99), பங்களாதேஷ் (47), அயர்லாந்து (20), சிம்பாப்வே (18), கென்யா (0).


# பாகிஸ்தான் வருகிறது ஆஸ்திரேலியா அணி

சிட்னி, ஏப்.22

அடுத்த இரு வருடங்களிலும் இரு தடவைகள் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து ஆஸ்திரேலிய அணி விளையாடவுள்ளது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியுள்ளன.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்யும் ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு ருவெண்ரி/20 போட்டியிலும் விளையாடும். தொடர்ந்து 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக மீண்டும் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தான் வருகை தரவுள்ளது.

இந்த வருடம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருந்த பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணத்தை ஆஸ்திரேலிய அணி பாதுகாப்புக் காரணங்களால் கைவிட்டிருந்தமை தெரிந்ததே.




# பராகுவே ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிக்கு பாரிய வெற்றி

## 6 தசாப்தங்களுக்குப் பின் ஆளும் கட்சி கவிழ்ந்தது


பெர்னாண்டோ லுகோ

பராகுவே, ஏப்.22

பராகுவே ஜனாதிபதி தேர்தலில், முன்னாள் ரோமன் கத்தோலிக்க ஆயர் பெர்னாண்டோ லுகோ வெற்றி பெற்றுள்ளார். இதையடுத்து ஆறு தசாப்த கால கொலோராடோ கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

பெரும்பாலான வாக்குச் சாவடிகளின் வாக்கு எண்ணிக்கைகள் அறிவிக்கப்பட்டு விட்டன. இவற்றில் பெர்ணாண்டோ லுகோ 41சதவீத வாக்குகளையும் கொலோராடோ கட்சியின் தலைவர் பிளான்கா ஒவிலார் 31 சதவீத வாக்குகளையும் ஈட்டியுள்ளனர்.

பிறிதொரு வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான லிகோ ஒலிவிடோ 22 சதவீத வாக்குகளையே பெற்றுள்ளார்.

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை நீக்க தலைமைத்துவ மாற்றம் தேவையென பெரும்பாலானோர் சமீப காலமாக அறைகூவல் விடுத்து வந்துள்ளனர்.

பழங்குடி மக்கள், ஏழை விவசாயிகள் ஆகியோரையும் இடது சாரி யூனியன்களையும் பெர்னாண்டோ லுகோ ஒருங்கிணைத்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மத்திய வலதுசாரி தேசப்பற்றுக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொலோராடோ கட்சி 1947 ஆம் ஆண்டு முதல் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்துள்ளது. உலகிலுள்ள வேறெந்தவொரு கட்சியும் ஆட்சியில் இப்படி நீடித்திருந்ததில்லை. லுகோவின் கூட்டமைப்பு இதற்கு முடிவு கட்டி விட்டது என அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

# ஒலிம்பிக் தீபத்துக்கு எதிரான பேரணிக்கு நேபாளத்தில் தடை

காத்மண்டு, ஏப்.22

ஒலிம்பிக் தீப ஊர்வலத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவும் தயக்கம் காட்டப்பட மாட்டாது என நேபாளம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவின் வடபகுதி திபெத்திலிருந்து மே மாத ஆரம்பத்தில் ஒலிம்பிக் தீபம் மலைப் பிராந்தியத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

எனினும், நேபாள எல்லை இராணுவ முகாமையொட்டிய பகுதிகளுக்கூடாக இதன் ஊர்வலம் இடம் பெறுமென்பதற்கில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.




அதேவேளை, தீப ஊர்வலத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, மலைப் பிராந்தியத்தின் தென்பகுதியில், மேலதிக நேபாள இராணுவ வீரர்களும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள் என உள்துறை அமைச்சின் பேச்சாளர் மொட்ராஜ் டோடெல் பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

# காசா கடவையில் மோதல்: 3 ஹமாஸ் போராளிகள் பலி

காசா, ஏப்.22

காசாவில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள கிரிம் ஷெலோம் கடவையில் ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேல் வீரர்களுக்குமிடையே மூண்ட மோதலில், 3 போராளிகள் கொல்லப்பட்டார்கள் . 13 இஸ்ரேலிய வீரர்கள் காயமடைந்தார்கள் என, பி.பி.ஸி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

ஹமாஸ் போராளிகள் கடுமையான மூடுபனி வேளையில், கிரிம் ஷெலோம் கடவையை நோக்கி கார்களில் வந்தார்கள். பின்னர் அவற்றில் இருகார்களிலிருந்து இஸ்ரேல் காவலரணை நோக்கி குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் ஹமாஸ் போராளிகளால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது: மோட்டார் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து இஸ்ரேல் வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். மோதல்கள் உக்கிரமடைந்தன என்றும் ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

காசாவுக்கான மட்டுப்படுத்தப்பட்ட விநியோகங்களுக்கு மாத்திரம் இக் கடவைகளில் இஸ்ரேலால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஹமாஸ் தலைவர் சமி அபு சுக்ரி 'இஸ்ரேலின் இத்தடைகள் எமது தாக்குதல்களை அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றன' என எச்சரிக்கை ஒன்றினை விடுத்திருந்தார்.

# நேபாளப் பிரதமராகிறார் மாவோயிஸ்ட் தலைவர்

காத்மண்டு, ஏப்.22

நேபாளத்தின் புதிய பிரதமராக தாம் பதவியேற்கப் போகிறார் என மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டா கூறியுள்ளார்.

நேபாள நாட்டின் நாடாளுமன்றத் தேர்தலில் மாவோயிஸ்ட் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது.

இதையடுத்து கிர்திபூர் என்ற இடத்தில் அக்கட்சியின் பேரணி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட தொண்டர்களிடையே பேசிய பிரசண்டா, புதிய அரசுக்கு தாம் தலைமையேற்கப்போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது இடைக்கால அரசுப் பொறுப்பில் உள்ள 7 கட்சி கூட்டணியின் ஒப்புதல்படி முதல் நாடாளுமன்றக் கூட்டத்தில் நேபாளம் குடியரசு நாடாக அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்தில் 240 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நடைபெற்ற [illegible] இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.


## இல்லற வாழ்வில் 50 ஆண்டுகள்

தில்லையம்பலம் செல்வராணி தம்பதிகள்

8 ஆம் வட்டாரம் – நயினாதீவு

22.04.1958



ஏகனாம் இறைவன் நாமம் இடையறாது ஓதிடும் நும்
வேகம் தான் என்னவென்று விண்ணவரும் அதிசயித்தார்
ஈகமாய் வாழும் நீவிர் இன்னும் பல்லாண்டு வாழ
நாகம்மை அருள்பொழிவாள் நலம்மிகுந்து வாழ்ந்திடுவீர்!

இல - 8/3 - 3/1A,
இராமநாதன் அவெனியு,
தெஹிவளை,
தொ.பே: 2734852

தி.கருணாகரன் - மகன்
க.புராதனி - மருமகள்
க.அபிராமி - பேர்த்தி
க.தஷானன் - பேரன்
க.நிதர்சனவருண் - பேரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரன் கொலையில் ஈ.பி.டி.பிக்கு தொடர்பு; அது குறித்த தகவல்களை சி.ஐ.டியினர் மறைப்பு!

## நீதிமன்றில் சட்டத்தரணி தகவல்

கொழும்பு, ஏப். 22

நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் கொலைச் சம்பவம் தொடர்பில் ஈ.பி.டி.பி. இயக்கத்திற்கு உள்ள தொடர்புபற்றி வெளிவந்துள்ள தகவல்களைக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நீதிமன்றத்திடம் மறைக்கின்றனர் என மகேஸ்வரனின் உறவினர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுஜீவசேன சிங்க நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண முன்னிலையில் நடைபெற்றது. அதன்போதே மகேஸ்வரனின் உறவினர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேற்கண்டவாறு கூறினார்.

சட்டத்தரணியின் இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண, கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த இன்ஸ்பெக்டர் ஆர்.எம்.ஏ. ராஜபக்ஷவிடம் வினவினார். அப்போது பதிலளித்த இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ, இக்கொலையில் ஈ.பி.டி.பியினருக்குத் தொடர்பு இருப்பதாகப் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சம்பவதினம் பி.பி.சி. வானொலிக்கு வழங்கிய பேட்டி குறித்து முழு அளவில் விசாரிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் பெறப்பட்ட வாக்குமூலம் தொடர்பான அறிக்கையொன்றை ஏற்கனவே நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் எனவும் மேலதிக விசாரணைகள் நடத்தப்படுமென்றும் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ மன்றில் தெரிவித்தார்.

மகேஸ்வரன் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களெனக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களான கொலின் வலன்ரினோ, பிரான்ஸிஸ் சுதர்ஷன், பெருமாள் பிரதீபன், எஸ். பிரியதர்ஷினி ஆகியோர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை மே மாதம் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (சி)

## அதிக விலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் உத்தரவாத விலையை விட மேலதிகமான விலைக்கு சந்தையில் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுகர்வோரின் முறைப்பாட்டை அடுத்து உத்தரவாத விலைக்கு மேலதிகமாக அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக சோதனையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தனதெரிவித்துள்ளார். (சி)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையமாக மாற்றப்பட்டிருந்தது. இத்தாக்குதலில் ஆழிப்பேரலை நினைவு மையம் மற்றும் அப்பகுதியில் இருந்த வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதில் அம்பலவன்பொக்கணையைச் சேர்ந்த உகந்தன் (வயது 18) என்பவரே மரணமானவர் ஆவார்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:

தியாகராசா (வயது 48) - விசுவமடு, கிரிசாளினி (வயது 08) - மணற்குடியிருப்பு, சுதாகரன் (வயது 22) - தர்மபுரம், ஜீவரட்ணம் (வயது 65), - வண்ணாங்குளம், லக்சனா (வயது 05) - கள்ளப்பாடு, சுனிஸ்ரன் (வயது 17) - பொக்கணை, அன்ரனி ஜெராட் (வயது 42) - மணற்குடியிருப்பு, சத்தியநாதன் (வயது 42) - தீர்த்தக்கரை. ஆகியோரே காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-2)

ஐடியல் அக்கடமி

| சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | நீராவியடி, யாழ்ப்பாணம் | யாழ்.வீதி, மானிப்பாய் |
|---|---|---|

மூன்று இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில்
O/L Day Class
பிரிவு II
ஆரம்பம் : 23.04.2008 புதன் 8 a.m
குறிப்பு: இம்மாதக் கட்டணம் Free.
சகல பாடங்களும் நடைபெறுகின்றன
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்

## மக்கள் தொண்டு செய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த இத்தகையதொரு தொண்டனைக் கோரமாகக் கொலை செய்தமையின் ஊடாக மனித உரிமையை மதித்துச் செயற்படுவதில் தான் எந்தளவிற்கு இழி நிலையில் இருக்கின்றது என்பதனை ஸ்ரீலங்கா அரசு மீண்டுமொரு முறை நிரூபித்திருக்கின்றது.

இவ்வாறு கருணாரட்ணம் அடிகளாரின் கொலையைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மெலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மனித உரிமைச் செயலகத்தின் இயக்குநரும், மனித உரிமைச் செயற்பாட்டாளருமான அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி மாங்குளம் மல்லாவி வீதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரால் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

மாங்குளம் பகுதியில் உள்ள தேவாலயத்தில் இறை வழிபாட்டினை முடித்துக் கொண்டு கருணாரட்ணம் அடிகளார் தனது வெள்ளை நிற ஊர்தியில் திரும்பிக்கொண்டிருந்த வேளையில் பிற்பகல் 12.30 மணியளவில் இவரது ஊர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

தனது இளம் வயது முதலே மக்கள் பணியில் ஈடுபட்டு வந்த கருணாரட்ணம் அடிகளாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்று உள்ளது. (த)

## கருணாரட்ணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கின்றது. இவரின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணிக்கு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இரங்கல் திருப்பலி கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு வவுனிக்குளம் புனித வேளாங்கன்னி ஆலய வளாகத்தில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

அடிகளாரின் இறுதிச் சடங்கில் பங்குபற்ற முடியாத குடாநாட்டு வாழ் இறைமக்களுக்காக யாழ்.மரியன்னை பேராலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். - என்றுள்ளது.

## யாழ்.மறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட ஆயர், குருக்கள், துறவியரின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இக்கொடூர செயலை யார் செய்திருந்தாலும் எந்த நோக்கத்திக்காக செய்திருந்தாலும் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இதுபோன்ற கோழைத்தனமான செயல்களை சம்மந்தப்பட்ட அனைவரும்விட்டு விலகி, தமிழ் மக்கள் அனைவரும் அமைதியிலும் சமாதானத்திலும் வாழ வழிவகுக்கும் ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடும்படி அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம் - இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. (அ-2)

## ஐ.நா.செயலருடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத்தமிழர் பிரச்சினை தீர இந்தியாவின் உடனடித் தலையீடு அவசியமென்றும் இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்குவதை புதுடில்லி நிறுத்த வேண்டுமெனவும் இந்தச் சந்திப்பின்போது வைகோ வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

இந்தத் திடீர் சந்திப்புகளையடுத்தே ஐ.நா.செயலரைச் சந்திக்க வைகோ முடிவு செய்தார் என்று அறியப்படுகிறது. சில தினங்களில் நியூயோர்க்கிற்கு புறப்படவுள்ளார். அங்கு ஐ.நா.செயலரைச் சந்தித்து ஈழத்தமிழர் விவகாரம் குறித்து பேச்சு நடத்தவுள்ள வைகோ, மனித உரிமை பாதுகாப்பு சங்கங்களின் உயர்மட்டப் பிரநிதிகள் குழுவினரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அதேசமயம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தமை தவறென்று கூறி வாதாடும் அமெரிக்க சட்டத்தரணிகள் பலருடனும் வைகோ பேச்சுகளை நடத்தவுள்ளார் என்றும் அறியவருகிறது.

வைகோவின் இந்த முக்கிய சந்திப்புகள் இலங்கை அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், இலங்கை அரசின் உயர் மட்டத்தினரிடம் எரிச்சலையும் ஆத்திரத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிகிறது. (அ-த)

## சந்திப்பைத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதால் அரசு இது விடயத்தில் இராஜதந்திர ரீதியில் தலையிடுமென இலங்கை அரசின் மூத்த அமைச்சரொருவர் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியை அறிவுறுத்த இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சி)

## நீதியின் முன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை மீறல்கள் குறித்து எவரும் கேள்வியெழுப்பாத, விசாரணை செய்யாத நிலை காணப்படுகின்றது.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும், சர்வதேச சமூகமும் தீர்வு காணவேண்டிய முக்கிய விவகாரமாக இது காணப்படுகின்றது.

ஜனவரியில் யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்த பின்னர் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மரணித்துள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாத கலாசாரத்திற்கு முடிவு காண வேண்டும்.

இலங்கையில் இடம்பெறும் கொலைகள், ஆள் கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குக் காரணமான எவரும் இதுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

இவ்வருட ஆரம்பத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை செயலிழந்துபோன பின்னர் இலங்கையிலுள்ள மில்லியன் கணக்கானவர்களின் நிலை மோசமடைந்துள்ளது.

### மடு தேவாலயமும் அடிகளாரும்

மடு தேவாலயத்திற்கான அச்சுறுத்தல் மற்றும் அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் போன்ற மனித உரிமைப் பணியாளர்கள் கொல்லப்பட்டமை போன்றன மோதலில் ஈடுபட்டுள்ளவர்களை சர்வதேச சமூகம் மீண்டும் பேச்சுக்குக் கொண்டுவர வேண்டிய தன் அவசியத்தைப் புலப்படுத்தியுள்ளது. அரசிடம் விசாரணை செய்து நீதி வழங்குவதற்கான அரசியல் உறுதி இல்லாததால் சர்வதேச பிரசித்தி பெற்ற நபர்களின் சுயாதீன குழு இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளதை நாம் கண்ணுற்றுள்ளோம்.

பிராந்திய வல்லரசு என்ற வகையிலும் புலம் பெயர்ந்த இலங்கையர்கள் பலர் வாழ்வதாலும் இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றை உள்ளடக்கிய வலுவான அரசியல் குழுவை உருவாக்கி இரு தரப்பும் பேச்சுக்குத் திரும்புவதை ஆஸ்திரேலியா உறுதி செய்ய வேண்டும். (சி)

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
30-04-2008 முன் நேரில்
2007 BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... Full Time Classes
*Computerized Accounting **INDIVIDUAL Classes
(Tally, Accpack, MYOB, QuickPro)
** MS Office **DTP *V.B., .net
* Hardware ** Internet & Email
* Video Editing *AutoCAD *ICT *GIT
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
*Sun Certified Java Programmer
Degree Course * BIT Semester 1,2,4 & 6
பதிவுகள் 25.04.2008 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

இந்து நாகரிகம்
A/L 08 Day Class
பகுதி II
ஆரம்பம்: 23.04.2008
புதன் காலை 8.am
By: S.ஜெயக்குமார் (B.A Hons)
புதிய அனுமதிகள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்
யாழ்.இந்து மகளிர்

## மரண அறிவித்தல்கள்

### Dr.வைரமுத்து பூபாலசுந்தரம்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. வைரமுத்து பூபாலசுந்தரம் நேற்று (21.04.2008) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பார்க் றோட்
கொழும்பு 05.
தொ.பே.:060 226 9060, 0779789103 (E)

தகவல்:
பூ.பிரகாஷ்
(மகன்)

### சின்னப்பொடி சின்னத்தம்பி

(சிமாசு சீற் தொழிலகம், ஆவரங்கால்)

இமையாணனை பிறப்பிடமாகவும் மாவடி வீதி, அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி சின்னத்தம்பி நேற்று (21.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பொடி - வல்லாத்தை தம்பதியரின் அன்பு மகனும், மாணிக்கத்தின் அன்புக் கணவரும், சுகுணா (சுவிஸ்), சுரேஸ் (ஜேர்மனி), சுதர்சன் (லண்டன்), சுமணா (சுவிஸ்), சுகர்ணா, சுபர்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடி வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (F)

தகவல்:
சி.மாணிக்கம்
(மனைவி)

### கிருஷ்ணர் செல்லம்மா

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமகவும் கொண்ட கிருஷ்ணர் செல்லம்மா நேற்று (21.04.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிதம்பரம் தம்பதியின் மகளும் காலஞ்சென்ற கிருஷ்ணனின் மனைவியும் தனேஸ்வரி, கணேசலிங்கம்(ஜேர்மன்), குகேஸ்வரி (திருகோணமலை), சறோஜினி(ஆசிரியை - கந்தவேள் இ.த.க. பாடசாலை, இருபாலை), உஷா(ஜேர்மன்), குட்டி(ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேந்திரன்(கோண்டாவில் தபால் ஊழியர்), சுந்தரலிங்கம், குணராசா, கவின்செல்வன் (ஜேர்மன்), சுடர்விழி(ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22.04.2008) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டைப்பிராய் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு. (G)

தகவல்:
மகேந்திரன்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது